## அல்லாஹ்வின் கட்டளை

وَاِنۡ یَّمۡسَسۡکَ اللّٰہُ بِضُرٍّ فَلَا کَاشِفَ لَہٗۤ اِلَّا ھُوَ ؕ وَاِنۡ یَّمۡسَسۡکَ بِخَیۡرٍ فَھُوَ عَلٰی کُلِّ شَیۡءٍ قَدِیۡرٌ

அல்லாஹ் உமக்கு ஒரு துன்பத்தைத் தந்தால், அவனையின்றி வேறெவராலும் அதை நீக்க முடியாது. அவன் உமக்கு ஒரு நன்மையைத் தந்தால் அவன் விரும்பியவற்றைச் செய்ய பேராற்றல் பெற்றவனாவான். **(6:18)**


بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 4

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

23 ஜமாதிஸ் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 27 சுல்ஹ் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
27 ஜனவரி 2022


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## அஹ்மதிய்யத்தின் தலைமையகம் தாருல் அமான் காதியானில் 126 வது ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் MTA தொலைக்காட்சி மூலம் ஆற்றிய அருளுக்குரிய மாநாட்டு நிறைவுரை

*♦ கோவிட் தொற்றானது உள்ளங்களின் அழுக்குகளை நீக்கவில்லை. இந்த எச்சரிக்கையிலிருந்து மனிதன் எந்த படிப்பினையும் பெறவில்லை. இதே நிலை தொடர்ந்தால் பின்னர் மாபெரும் அபாயகரமான விளைவுகள் வெளிப்படும்*

*♦ இன்று இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளின் சில அம்சங்களை எடுத்துரைப்பேன். அதன்படி செயல்பட்டால் பின்னர் உலகம் அமைதிப்பூங்காவாக மாறி விடும்*

*♦ ஒருவர் மற்றவரின் மார்க்கத்தின் தோற்றுநரை தவறானவராக குறிப்பிட்டு அவர் மீது பழி சுமத்தக் கூடாது என்று இஸ்லாம் கூறுகின்றது. மற்ற அனைத்து மார்க்கங்களும் பொய்யானவையாக இருந்தன என்று இஸ்லாம் கூறவில்லை. எல்லா சமுதாயங்களிலும் தூதர் வந்ததாக இஸ்லாம் கூறுகின்றது. மேலும் وَاِنۡ مِّنۡ اُمَّةٍ اِلَّا خَلَا فِيۡهَا نَذِيۡرٌ என்ற வசனத்தின் ஒளியில் ஒரு முஸ்லிம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களையும் அல்லது இந்துக்களின் அவதாரங்களையும் கண்ணியத்துடன் பார்க்க வேண்டும் என்றும் இஸ்லாம் கூ றுகின்றது*

*♦ ஒவ்வொரு மார்க்கத்தின் தோற்றுநருக்கும் கண்ணியம் வழங்க வேண்டும். மேலும் எல்லா மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர்களுக்கும் கண்ணியம் வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது*

*♦ இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என்றும், பலவந்தமாக மக்கள் முஸ்லிம்களாக ஆக்கப்பட்டு விட்டனர் என்றும் இஸ்லாத்தைக் குறித்து ஒரு தவறான சித்திரம் நிலைநாட்டப்பட்டுள்ளது. உண்மையில் இஸ்லாம் அதனை மறுக்கின்றது*

*♦ இஸ்லாம் இந்த உலகத்தில் தன்னை ஏற்காததன் காரணமாக எவருக்கும் தண்டனை வழங்கவில்லை. இன்றும் முஸ்லிம்களின் செயல் இந்த போதனைக்கு ஏற்புடையதாக அமைந்து விட்டால் பின்னர் உலகத்திற்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடும்*

*♦ தண்டனை வழங்குவதால் சீர்திருத்தம் ஏற்படுமா? அல்லது மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படுமா? என்று பார்க்க வேண்டும். சீர்திருத்தம் நோக்கமாக இருக்க வேண்டும்*

*♦ எல்லா வகையான கொடுக்கல் வாங்கலிலும் ஒருவர் மற்றவரின் உரிமைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது*

*♦ தற்பெருமை கொள்ளாதீர்கள். மக்களை ஏளனமாகவும், இழிவாகவும் கருதாதீர்கள். ஆவணம் கொண்டு எவரும் எந்த உயர் அந்தஸ்தையும் அடைய முடியாது என்றும் இஸ்லாம் கூறுகின்றது. பணிவு தான் உண்மையான தலைமைத்துவத்தை வழங்குகின்றது. இந்த தலைமைத்துவம் தான் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டக் கூடியதாக ஆக முடியும்*

*♦ ஜல்ஸாவின் அருட்களையும் அதில் பங்கு பெற்றவர்கள் தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டும். உலகில் எல்லா இடங்களிலும் இந்த நிகழ்ச்சியை கேட்கக் கூடியவர்கள் ஓர் உத்வேகத்தையும், உணர்வையும் தன்னுள் ஏற்படுத்திக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் தமது பகுதிகளில் இஸ்லாத்தின் தூய போதனைகளின் ஒளியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும் – ஹுஸூர் அய்யதஹுல்லாஹ்*

கோவிட் சூழ்நிலையின் காரணமாக ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டல் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு இந்த ஜல்ஸா நடைபெற்றது. ஆயினும் நேரடி ஒளிபரப்பின் மூலமாக ஜல்ஸாவிலிருந்து பெரும் அளவில் பயன் பெறப்பட்டது. நேரடி ஒளிபரப்பின் மூலமாக **1,06,644** நபர்கள் ஜல்ஸாவை பார்க்கவும், கேட்கவும் செய்துள்ளனர். **6** தேசிய மொழிகளில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் மொழியாக்கம் செய்யப்பட்டன. மார்க்க அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றினர். ஜமாஅத் உறுப்பினர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக தர்பிய்யத் அம்சங்களைக் கொண்ட ஆவண படங்கள் ஒளிபரப்பப்பட்டன. பல நிக்காஹ் அறிவிப்புகள் செய்யப்பட்டன. அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் ஜல்ஸாவின் செய்திகள் வெளியாகியுள்ளன. மிக நிம்மதியான, மகிழ்ச்சிகரமான கால நிலையில் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளும் நடந்து முடிந்தன

அல்ஹம்துலில்லாஹ்! ஜல்ஸா ஸாலானா காதியான் புஸ்தானே அஹ்மது மைதானத்தில் டிசம்பர் 24, 25, 26 – 2021 ஆகிய தேதிகளில் மிக சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. கோவிடின் தற்போதைய சூழலின் காரணமாக ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் காதியானிற்கு நேரில் வந்து ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே இருந்தபோதிலும் நேரடி ஒளிபரப்பின் மூலமாக முழு இந்தியாவின் அஹ்மதிகளும் இந்த ஜல்ஸாவிலிருந்து மிகவும் பயன் பெற்றனர். இன்னும் கூறப்போனால் வெளிநாடுகளிலும் காதியான் ஆண்டு மாநாடு பார்க்கப்பட்டது மேலும் கேட்கப்பட்டது. இவ்வாறு அல்லாஹ் கடினமான சூழலிலும் நமக்கு தப்லீக் மற்றும் தர்பிய்யத்திற்கான புதிய வழியை ஏற்பாடு செய்து விட்டான். இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்களின் சிறப்பான வழிகாட்டல் மற்றும் துஆக்களின் விளைவாக இந்த ஜல்ஸாவை நடத்துவது சாத்தியமானது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்கள் காதியானிற்கு வருகை தந்தனர். அவர்களை வரவேற்கின்ற மகிழ்ச்சிகளில் காதியான் வாசிகள் தமது வீடுகளையும், தெருக்களையும் சுத்தம் செய்தனர். ஒவ்வொருவரும் தத்தமது வடிவில் ஜல்ஸாவிற்கான ஆயத்தங்களை செய்தனர். கூட்டு அளவிலான வகாரே அமல் மூலமாக முழு காதியானும் சுத்தம் செய்யப்பட்டது. ஜல்ஸாவிற்கு சில நாட்களுக்கு முன்பாகவே மின்சாரத்துறை சார்பாக காதியானின் அனைத்து வீதிகளிலும், சாலைகளிலும் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. பெஹெஷ்தி மக்பரா, தாருல் மஸீஹ், மஸ்ஜித் முபாரக், மஸ்ஜித் அக்ஸா, மினாரத்துல் மஸீஹ் போன்றவை வண்ண விளக்குகளால் மணப்பெண்ணைப் போன்று அலங்கரிக்கப்பட்டன. இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மீக நகரம் தனது மறைவான ஒளிகளுடன் பௌதீக ஒளிகளாலும் ஒளி வீசியது. (அறிக்கை: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர் – தொடரும்....)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பில் அடிமைகளை விடுவித்த சம்பவங்களின் நற்குறிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அது தொடர்பாக மேலும் சில சம்பவங்கள் உள்ளன. நஹ்தியா மற்றும் அன்னாரின் மகள் இருவரையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விடுவித்தார்கள். அவர்கள் இருவரும் பனூ அப்துத்தார் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண்ணின் அடிமைகளாக இருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவ்விருவரையும் கடந்து சென்றபோது அந்த இரு பெண்களின் எஜமானி கோதுமையை அரைத்து வருவதற்காக அந்த இரு பெண்களை அனுப்பி இருந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஒருபோதும் உங்களை விடுதலை செய்ய மாட்டேன் என்று அவர் கூறிக் கொண்டிருந்தார். அப்போது இன்ன பெண்ணின் தாயே! உங்களின் சத்தியத்தை முறித்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு நீங்கள் செல்லுங்கள். நீங்கள் தான் இவர்களை சீர்கெடுத்து விட்டீர்கள். உங்களுக்கு இவர்களைக் குறித்து அக்கறை இருக்குமென்றால் நீங்கள் இவ்விருவரையும் விடுதலை செய்வதற்கு ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்று அந்த எஜமானி கூறினார். அதற்கு இவ்விருவருக்கும் பகரமாக நான் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் இவ்வளவு தொகை என்று (ஒரு தொகையை) கூறினார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நான் இவர்கள் இருவரையும் வாங்கிக் கொண்டேன். மேலும் இவர்கள் இருவரும் சுதந்திரமானவர்கள் என்று கூறினார்கள். பின்னர், இந்தப் பெண்ணின் கோதுமையை திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் அவ்விருவரிடம் கூறினார்கள். அதாவது எந்த கோதுமையை அரைப்பதற்காக அவர்கள் சென்று கொண்டிருந்தார்களோ அதனை திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று அந்த இருவரிடமும் கூறினார்கள்.

அபூபக்ரே! நாங்கள் இருவரும் இந்தப் பணியிலிருந்து வெளியேறி விட்டோமா? இந்த கோதுமையை திருப்பிக் கொடுத்து விட வேண்டுமா? என்று அவர்கள் இருவரும் கேட்டனர். அதாவது எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நாங்கள் செய்து விடவா? கோதுமையை அரைத்து கொடுத்து விட்டு திரும்பி வந்து விடவா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், சரி என்று கூறினார்கள். நீங்கள் இருவரும் விரும்புகின்றீர்கள் என்றால் அப்படியே செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பனூ முஅம்மல் கோத்திரத்தின் ஓர் அடிமைப் பெண்ணை கடந்து சென்றார்கள். பனூ முஅம்மல் பனூ அதீ பின் கஅப்பின் ஒரு கிளை கோத்திரமாகும். அந்த அடிமைப் பெண் முஸ்லிமாக இருந்தார். அவர் இஸ்லாத்தை விட்டு விலகி விட வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அவருக்கு துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நாட்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இணை வைப்பவராக இருந்தார்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருக்கவில்லை. எனவே அந்தப் பெண்ணை அடித்துக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் சோர்வடைந்து விடும்போது, நான் உம்மை சோர்வின் காரணமாகவே விட்டுள்ளேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். அப்போது அல்லாஹ் உம்முடனும் இதேபோன்று நடப்பான் என்று அந்தப் பெண்மணி கூறினார். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரிடமிருந்து விலைக்கு வாங்கி அந்தப் பெண்மணியை விடுதலை செய்து விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தையார் அபூகுஹாஃபா அன்னாரிடம் இவ்வாறு கூறினார்: எனது மகனே! நீர் பலவீனமான மக்களை விடுவிக்கின்றீர் என்பதை நான் காண்கின்றேன். நீங்கள் செய்ய விரும்புவதை செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்றால் ஆற்றல் வாய்ந்த ஆண்களை விடுதலை செய்யுங்கள். ஏனென்றால் அதன் மூலம் அவர்கள் உங்களை பாதுகாப்பார்கள். மேலும் அவர்கள் உங்களுடன் இருப்பார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனது அன்பிற்குரிய தந்தையே! நான் கண்ணியமும், கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே விரும்புகின்றேன்.

**(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 236 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

எனவே அல்லாமா குர்தபி மற்றும் அல்லாமா ஆலூஸி போன்ற சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது கீழ்க்கண்ட வசனங்களை அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இதே செயலின் காரணமாக அன்னாரின் கண்ணியத்திற்காக அருளினான்.

فَاَمَّا مَنْ اَعْطٰى وَاتَّقٰى ۙ﴿۶﴾ وَصَدَّقَ بِالْحُسْنٰى ۙ﴿۷﴾ فَسَنُيَسِّرُهٗ لِلْيُسْرٰى ؕ﴿۸﴾

وَاَمَّا مَنْۢ بَخِلَ وَاسْتَغْنٰى ۙ﴿۹﴾ وَكَذَّبَ بِالْحُسْنٰى ۙ﴿۱۰﴾ فَسَنُيَسِّرُهٗ لِلْعُسْرٰى ؕ﴿۱۱﴾

وَمَا يُغْنِيْ عَنْهُ مَالُهٗۤ اِذَا تَرَدّٰى ؕ﴿۱۲﴾ اِنَّ عَلَيْنَا لَلْهُدٰى ۫ۖ﴿۱۳﴾

وَاِنَّ لَنَا لَلْاٰخِرَةَ وَالْاُوْلٰى ﴿۱۴﴾ فَاَنْذَرْتُكُمْ نَارًا تَلَظّٰى ۚ﴿۱۵﴾

لَا يَصْلٰىهَاۤ اِلَّا الْاَشْقَى ۙ﴿۱۶﴾ الَّذِيْ كَذَّبَ وَتَوَلّٰى ؕ﴿۱۷﴾ وَسَيُجَنَّبُهَا الْاَتْقَى ۙ﴿۱۸﴾

الَّذِيْ يُؤْتِيْ مَالَهٗ يَتَزَكّٰى ۚ﴿۱۹﴾ وَمَا لِاَحَدٍ عِنْدَهٗ مِنْ نِّعْمَةٍ تُجْزٰۤى ۙ﴿۲۰﴾

اِلَّا ابْتِغَآءَ وَجْهِ رَبِّهِ الْاَعْلٰى ۚ﴿۲۱﴾ وَلَسَوْفَ يَرْضٰى ۠﴿۲۲﴾

எனவே எவர் (இறை வழியில்) கொடுத்து இறையச்சத்தை மேற்கொண்டு உண்மையை நிரூபிக்கின்றாரோ நிச்சயமாக நாம் அவருக்கு வசதியை வழங்குவோம். ஆனால் எவன் கருமித்தனம் செய்து, அலட்சியம் செய்து உண்மையைப் பொய்ப்படுத்துவானோ நிச்சயமாக நாம் அவனுக்கு துன்பத்தை நோக்கி செல்லும் பாதையை எளிதாக்குவோம். அவனது செல்வம் அவன் அழிவிற்குள்ளாகும்போது அவனுக்கு எந்தப் பயனும் அளிக்காது. நிச்சயமாக நேர்வழி காட்டுவது எமது பொறுப்பாகும். மேலும் மறுமையும், இம்மையும் எமக்குரியவையே ஆகும். எனவே சுடர்விட்டெறியும் நெருப்பைப் பற்றி உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்கின்றேன். (உண்மையைப்) பொய்ப்படுத்தி புறக்கணிக்கின்ற மிகப் பேறிழந்தவனைத் தவிர வேறு எவனும் அதில் நுழைய மாட்டான். மேலும் மிகுந்த இறையச்சமுடையவர் அதிலிருந்து தொலைவிலேயே வைக்கப்படுவார். அவரோ தாம் தூய்மையடைய தமது செல்வத்தை (இறை வழியில்) வழங்குவார். மேலும் எவருக்கும் திருப்பி செய்ய வேண்டிய உபகாரம் எதுவும் அவருக்கு இருக்காது. மாறாக, அவர் தமது செல்வத்தை மிக்க மேன்மைக்குரிய தமது இறைவனின் திருப்தியைத் தேடவே வழங்குகின்றார். அவன் நிச்சயம் அவரைப் பற்றி விரைவில் திருப்தி அடைவான். (92:6–22)

**(இமாம் குர்தபி அவர்கள் எழுதிய அல்ஜாமிவுல் அஹ்காமுல் குர்ஆன் என்ற நூல் தொகுதி 2 பக்கம் 3330 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விடுதலை செய்த அடிமைகளில் ஹஸ்ரத் கப்பாப் பின் அரத் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கப்பாப் பின் அரத் (ரலி) அவர்களின் நற்குறிப்பை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

முதலில் அடிமையாக இருந்த ஒரு சஹாபி இருந்தார். அன்னார் ஒரு முறை குளிப்பதற்காக சட்டையை கழற்றியபோது ஒரு நபர் அருகில் நின்று கொண்டிருந்தார். அன்னாரின் முதுகின் தோலின் மேல் பக்கம் எவ்வளவு கடினமானதாக இருந்ததென்றால் அது எருமை மாட்டின் தோல் போன்று இருப்பதை அவர் கண்டார். இதைப் பார்த்து அவர் ஆச்சரியம் அடைந்தார்.

உங்களுக்கு எப்போதிருந்து இந்த நோய் உள்ளது? உங்களது முதுகின் தோல் விலங்குகளின் தோலைப் போன்று கடினமாக உள்ளதே என்று அவர் கூறினார். இதைக் கேட்ட அந்த சஹாபி சிரித்தார்கள். அதாவது ஹஸ்ரத் கப்பாப் (ரலி) சிரித்தார்கள். பின்னர் இது ஒன்றும் நோய் அல்ல. நாங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது எங்களுக்கு தண்டனை அளிக்க வேண்டுமென்று எமது முதலாளி முடிவு செய்திருந்தார். எனவே சுடு வெயிலில் எம்மை கிடத்தி எம்மை அடிக்கத் தொடங்கி விட்டார். நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறும்படி என்னிடம் கூறினான். நாங்கள் அதற்குரிய பதிலாக ஷஹாதத் கலிமாவை ஓதி வந்தோம். அப்போது அவன் மீண்டும் அடிக்கத் தொடங்கி விட்டான். அதன் பிறகும் அவனது கோபம் அடங்கவில்லை. எனவே எங்களை கற்களில் இழுத்துக் கொண்டே சென்றான் என்று (அந்த சஹாபி) கூறினார்கள்.

அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: அரபு நாட்டில் வீட்டை தண்ணீரிலிருந்து பாதுகாப்பதற்காக வீட்டிற்கு அருகில் ஒரு வகையான கற்களை மக்கள் போட்டு வந்தனர். அதனை பஞ்சாபியில் கன்கர் என்று கூறுவார்கள். (ஜல்லி கற்கள்) அது மிகவும் கடுமையானதாகவும், கூர்மையான முனையைக் கொண்ட கற்களாகவும் இருந்தது. தண்ணீரின் ஓட்டத்தால் வீட்டிற்கு எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது என்பதற்காக மக்கள் அதனை சுவற்றுடன் வைத்து விடுவார்கள். ஆக அந்த சஹாபி கூறுகின்றார். நாங்கள் இஸ்லாத்தை மறுதலிக்காதபோது மக்கள் எங்களை அடித்து அடித்து சோர்ந்து போய் விடுவார்கள். பின்னர் எங்களது கால்களில் கயிற்றை கட்டி அந்த கூர்மையான கற்களில் எங்களை இழுத்துக் கொண்டு செல்வார்கள். இன்று நீர் பார்ப்பதெல்லாம் அந்த அடி, உதை மற்றும் இழுத்துச் சென்றதன் விளைவே ஆகும்.

சுருக்கமாக ஆண்டாண்டு காலமாக அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டு வந்தது. இறுதியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் இந்த விஷயத்தை சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே அன்னார் (ரலி) தமது சொத்துகளின் பெரும் பகுதியை விற்று அவர்களை விடுவித்து விட்டார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 22 பக்கம் 546, 547 குத்பா ஜுமுஆ 31 அக்டோபர் 1941))

அடுத்து, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அடிமைகளை விடுவித்தது தொடர்பாக குறிப்பிட்டவாறு ஒரிடத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்த இந்த அடிமைகள் பல்வேறு சமுதாயங்களை சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் போன்ற அபிஸீனிய அடிமைகளும், ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களைப் போன்ற ரோமானிய அடிமைகளும் இருந்தனர். பின்னர் அவர்களில் ஜுபைர் மற்றும் ஷுஹைப் போன்ற கிறிஸ்தவர்களும் இருந்தனர். பிலால் மற்றும் அம்மாரைப் போன்ற இணை வைப்பவர்களும் இருந்தனர். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை அன்னாரது எஜமானன் சுடும் மணலில் கிடத்தி அன்னாரின் மீது கற்களை வைத்து விட்டான். அல்லது இளைஞர்களை நெஞ்சில் ஏறி நின்று குதிப்பதற்காக நியமித்தான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் மீது அநீதியிழைக்கப்படுவதைப் பார்த்தபோது அன்னாரின் எஜமானர்களுக்கு அவர்களுக்குரிய தொகையை கொடுத்து அன்னாரை விடுதலை செய்து விட்டார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 193, 194)

ஒரு முறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கு எண்ணம் கொண்டார்கள். இது தொடர்பாக வருகின்றது. முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாகி இஸ்லாம் வெளிப்பட்டபோது குரைஷிய நிராகரிப்பாளர்கள் தமது கோத்திரத்தைச் சார்ந்த மக்களில் அன்னார் (ஸல்) மீது ஈமான் கொண்டிருந்த மக்களுக்கு கடுமையான தண்டனையும், துன்பமும் கொடுத்து வந்தனர். அன்னாரை அன்னாரின் மார்க்கத்திலிருந்து விலக்கி விட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அப்போது நீங்கள் பூமியில் பரவி விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கையாளர்களிடம் கூறினார்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஒன்று கூட்டி விடுவான். நாங்கள் எந்தப் பக்கம் செல்வது? என்று சஹாபிகள் கேட்டனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபிஸீனிய நாட்டின் பக்கம் சைகை செய்தவாறு அந்தப் பக்கம் என்று கூறினார்கள். இது ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ரஜப் மாதத்தில் நடந்த விஷயமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப 11 ஆண்களும், 4 பெண்களும் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானி அலல் மவாஹிப் தொகுதி 1 பக்கம் 503, 504 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்கள் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் துன்பம் கொடுக்கப்பட்டது. அப்போது அன்னாரும் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்கு எண்ணம் கொண்டார்கள். எனவே இது குறித்து புகாரியில் இவ்வாறு அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். முஸ்லிம்களுக்கு துன்பங்கள் கொடுக்கப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அபிஸீனியாவின் பக்கம் சென்றார்கள். بَرْكُ الْغِمَاد என்ற இடத்தை அன்னார் அடைந்தார்கள். بَرْكُ الْغِمَاد என்பது மக்காவிலிருந்து 5 இரவு பயணத் தொலைவில் கடலுடன் இணைந்த ஒரு நகரமாகும். அப்போது அன்னாரை இப்னு தகினா சந்தித்தார். அவர் காரா கோத்திரத்தின் தலைவராக இருந்தார்.

அபூபக்ரே! எங்கே செல்ல திட்டம்? என்று அவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனது சமுதாயம் என்னை வெளியேற்றி விட்டது. நான் பூமியில் சுற்றித் திரிந்து, எனது இறைவனை வணங்கிக் கொண்டிருப்பதற்கு நான் விரும்புகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு இப்னு தகீனா இவ்வாறு கூறினார்: உம்மைப் போன்ற நபர்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறுவதும் கூடாது. அவர்களை வெளியேற்றவும் கூடாது. நீர் மறைந்து போன நல்லொழுக்கங்களை செயல்படுத்துகின்றீர்கள். மேலும் உறவுகளை பேணுகின்றீர்கள். சோர்வடைந்த பலவீனமான மக்களின் சுமையை சுமக்கின்றீர்கள். விருந்து உபசரிப்பு செய்கின்றீர்கள். துன்பத்திற்கு ஆளானவர்களுக்கு இயன்ற அளவு உதவி செய்கின்றீர்கள்.

ஓரிடத்தில் இவ்வாறும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது: வறியவர்களுக்கு உழைத்து கொடுக்கின்றீர்கள். உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றீர்கள். ஏழைகளை பராமரிக்கின்றீர்கள். விருந்து உபசரிப்பு செய்கின்றீர்கள். உரிமைகளை பெறுவதில் கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்கின்றீர்கள் என்று அவர் கூறினார். பின்னர் நான் உமக்கு எனது இடத்தில் அடைக்கலம் கொடுக்கின்றேன். திரும்பி வாருங்கள். உங்களது நாட்டிலேயே உங்களது இறைவனை வணங்குங்கள் என்று அவர் கூறினார்.

இப்னு தகீனாவும் நடக்கத் தொடங்கினார். அவருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மக்காவிற்கு வந்தார்கள். மேலும் குரைஷிய நிராகரிப்பளார்களின் தலைவர்களை அவர் சந்தித்தார். அவர்களிடம் இப்னு தகீனா இவ்வாறு கூறினார்: அபூபக்ர் எப்படிப்பட்ட நபர் என்றால் அவரைப் போன்ற மனிதர்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறுவதும் கூடாது. வெளியேற்றப்படுவதும் கூடாது. எனவே காணாமல் போன சிறப்புகளை நிலைநாட்டுகின்ற மனிதரையா நீங்கள் வெளியேற்ற விரும்புகின்றீர்கள்? அவரோ உறவுகளை பேணுகின்றார். சோர்ந்து களைத்துபோன மக்களின் சுமையை சுமக்கின்றார். விருந்து உபசரிப்பு செய்கின்றார். துன்பங்களில் பிறருக்கு உதவி செய்கின்றார். அப்போது குரைஷிகள் இப்னு தகீனா கொடுத்த அடைக்கலத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பாதுகாப்பை வழங்கினார்கள். மேலும் அபூபக்ர் தமது இறைவணக்கத்தை தமது வீட்டிலேயே செய்து கொள்ளட்டும். வீட்டிலேயே தொழுது கொள்ளட்டும். தான் விரும்பிய அளவிற்கு தொழுது கொள்ளட்டும். ஆனால் தமது இறைவணக்கம் மற்றும் திருக்குர்ஆனை ஓதுவதன் மூலம் எங்களுக்கு துன்பம் தரக் கூடாது என்றும், உரத்த குரலில் ஓதக் கூடாது என்றும் அபூபக்ரிடம் கூறி விடும்படி இப்னு தகீனாவிடம் அவர்கள் கூறினர்.

ஏனென்றால் அவர் எங்களது மகன்களையும், எங்களது மனைவிகளையும் வழி கொடுத்து விடுவார் என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது. தமது வீட்டைத் தவிர்த்து வேறு எங்கும் அவர் தொழுகையை நடத்தவோ அல்லது பகிரங்கமாக திருக்குர்ஆன் ஓதுவதோ கூடாது என்றும் கூறினார். பின்னர் சிறிது காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. எனவே அன்னார் தமது வீட்டின் முற்றத்தில் ஒரு பள்ளிவாசலை அதாவது தொழுகைக்கான ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். மேலும் திறந்த வெளியில் வெளியே வந்தார்கள். அங்கேயே தொழுதார்கள். திருக்குர்ஆனையும் ஓதினார்கள். அன்னாரை இணை வைப்பவர்களின் பெண்களும், பிள்ளைகளும் சூழ்ந்து கொண்டார்கள். மேலும் ஆச்சரியம் அடைந்து வந்தார்கள். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து அந்த மக்கள் வியப்படைந்தனர். அவர் மிகவும் அழக் கூடிய நபராக இருக்கின்றார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து அவர்கள் கூறி வந்தனர். திருக்குர்ஆனை ஓதும்போது அன்னார் (ரலி) அவர்களால் தமது கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. இந்த நிலையானது குரைஷிய இணை வைப்பவர்களின் தலைவர்களை மிகவும் இன்னலுக்கு

ஆளாக்கியது. மேலும் அவர்கள் இப்னு தகீனாவை அழைத்து வரச் செய்தார்கள். அவர் அவர்களிடத்தில் வந்தார். மேலும் அபூபக்ர் தமது வீட்டிலேயே தமது இணைவணக்கத்தை செய்து வர வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான் நாங்கள் அவருக்கு அடைக்கலம் வழங்கி இருந்தோம். ஆனால் அவர் அந்த நிபந்தனையை கருத்தில் கொள்ளவில்லை. மேலும் தமது வீட்டின் முற்றத்தை பள்ளிவாசலாக்கிக் கொண்டார். மேலும் தொழுகையையும், திருக்குர்ஆனையும் பகிரங்கமாக ஓதி வருகின்றார். அவர் எமது பிள்ளைகளையும், பெண்களையும் சோதனையில் ஆழ்த்தி விடுவார் என்று நாங்கள் அஞ்சுகின்றோம். நீங்கள் அவரிடத்தில் செல்லுங்கள். அவர் விரும்பினால் தமது விட்டிற்குள்ளேயே இருந்து கொண்டு தமது இறைவணக்கத்தை செய்து கொள்ளட்டும். அவ்வாறின்றி, அவர் பகிரங்கமாக ஓதுவதிலும், தொழுவதிலும் பிடிவாதமாக இருக்கின்றார் என்றால் உமது அடைக்கலத்திற்கான பொறுப்பை திருப்பி ஒப்படைத்து விட வேண்டும் என்று அவரிடம் நீர் கூறி விடும். ஏனென்றால், உமது பொறுப்பை முறித்துக கொண்டால் பின்னர் நாங்கள் ஒருபோதும் அபூபக்ரை பகிரங்கமாக இறைவணக்கம் செய்ய விட மாட்டோம் என்று கூறினர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்னு தகீனா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார். நான் தங்களுக்காக உடன்படிக்கை செய்து கொண்ட அந்த நிபந்தனையைப் பற்றி தங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார். எனவே நீங்கள் இந்த எல்லைக்குட்பட்டு இருந்து கொள்ளுங்கள். இல்லையென்றால் எனது பொறுப்பை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள். ஏனென்றால் நான் எந்த நபருக்கு அடைக்கலம் கொடுத்தேனோ அவருடன் நான் உடன்படிக்கையை முறித்துக் கொண்டேன் என்று அரபிகள் கூறுவதை நான் விரும்பவில்லை என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உங்களது அடைக்கலத்தை நான் திருப்பி ஒப்படைக்கின்றேன். நான் அல்லாஹ்வின் அடைக்கலத்திலேயே திருப்தி கொள்கின்றேன் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி ஹதீஸ் எண் 2297 & சஹீஹ் புகாரி தொகுதி 4 பக்கம் 276 – நஸாரத் இஷாஅத் ரப்வாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வீட்டின் முற்றத்தில் உருவாக்கிய மஸ்ஜிதைக் குறித்து சஹீஹ் புகாரியின் விரிவுரையான உம்தத்துல் காரியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது அந்த பள்ளிவாசல் வீட்டின் சுவர்கள் வரை பரவி இருந்தது. இஸ்லாத்தில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலாக அது இருந்தது.

(உம்தத்துல் காரி தொகுதி 12 பக்கம் 185, கிதாபுல் கிஃபாலா ஹதீஸ் எண் 2297)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்ற மனிதருக்கு முழு மக்காவும் நன்றி கடன் பட்டிருந்தது. அன்னார் (ரலி) சம்பாதித்து வந்ததையெல்லாம் அடிமைகளை விடுதலை செய்ய வைப்பதற்காக செலவிட்டு வந்தார்கள். அன்னார் (ரலி) ஒரு முறை மக்காவை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு தலைவர் அன்னாரை வழிப்பாதையில் சந்தித்தார். அபூபக்ரே! நீர் எங்கே செல்கின்றீர்? என்று அவர் கேட்டார். அதற்கு இந்த நகரம் இனி எனக்கு பாதுகாப்பில்லை. நான் எங்கோ செல்கின்றேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு அந்த தலைவர், உம்மைப் போன்ற நல்ல தலைவர்கள் நகரத்தை விட்டு வெளியேறி விட்டால் பின்னர் நகரம் அழிந்து விடும். மேலும் நான் உங்களுக்கு அடைக்கலம் வழங்குகின்றேன். நீங்கள் நகரத்தை விட்டு வெளியேறாதீர்கள் என்று அவர் கூறினார். எனவே அன்னார் (ரலி) அந்த தலைவரின் அடைக்கலத்தில் திரும்பி வந்து விட்டார்கள். அன்னார் (ரலி) அதிகாலையில் எழும்போதும், திருக்குர்ஆன் ஓதும்போதும் பெண்களும், பிள்ளைகளும் சுவர்களை ஒட்டி காதுகளை வைத்து திருக்குர்ஆனை கேட்டு வந்தார்கள். ஏனென்றால் அன்னார் (ரலி) அவர்களின் குரலில் பெரும் உருக்கமும், வேதனையும் இருந்தது. திருக்குர்ஆன் அரபி மொழியில் இருந்ததால் எல்லா பெண்களும், ஆண்களும், பிள்ளைகளும் அதன் பொருளை புரிந்து வந்தனர். கேட்பவர்கள் அதனால் தாக்கத்திற்குள்ளாகி வந்தார்கள். இந்த விஷயம் பரவி விட்டபோது இவ்வாறு அனைத்து மக்களும் மார்க்கமற்றவர்களாக ஆகி விடுவார்கள் என்ற சர்ச்சை மக்காவில் ஏற்பட்டது. அதாவது அன்னார் (ரலி) அவர்களின் உருக்கம் நிறைந்த குரலில் திருக்குர்ஆனை செவியுற்று அந்த மக்கள் (தமது) மார்க்கத்தை விட்டு வெளியேறி விடுவார்கள் என நிராகரிப்பாளர்கள் அஞ்சினர். இதுவே இன்று அஹ்மதிகளுடன் சில நாடுகளில் நடைபெறுகின்றது. குறிப்பாக பாகிஸ்தானில் அஹ்மதிகள் திருக்குர்ஆன் ஓதினாலும், மேலும் தொழுதவாறும் பார்த்து விட்டால் பின்னர் அஹ்மதிகள் மார்க்கமற்றவர்களாக ஆகி விடுகின்றனர். எனவே அஹ்மதிகள் தொழுதால் மற்றும் திருக்குர்ஆன் ஓதினால் பெரும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: இறுதியில் அந்தத் தலைவரிடம் மக்கள் வந்தனர். நீங்கள் இந்த நபரை ஏன் அடைக்கலத்தில் வைத்துள்ளீர்கள்? என்று கேட்டனர். அப்போது தாங்கள் இவ்வாறு திருக்குர்ஆனை ஓதாதீர்கள் என்றும், மக்காவாசிகள் இதனால் அதிருப்தி அடைந்துள்ளனர் என்றும் அந்த தலைவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார். அப்படியென்றால் நீங்கள் உங்களது அடைக்கலத்தை திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள். என்னால் இதிலிருந்து விலகி இருக்க முடியாது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அந்த தலைவர் தனது அடைக்கலத்தை திரும்ப பெற்றுக் கொண்டார். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 327)

ஷஅப் அபீ தாலிபிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். மக்கத்து குரைஷிகள் ஏகத்துவ செய்தியை தடுப்பதற்காக சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்தனர். ஆனால் எல்லா புறமிருந்தும் அதை தடுப்பதில் தோல்வியை சந்தித்தபோது அவர்கள் ஒரு செயல் திட்டமாக பனூ ஹாஷிம் மற்றும் பனூ முத்தலிபுடன் தொடர்பை துண்டித்துக் கொள்வதற்கான முடிவெடுத்தனர். எனவே இது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது குரைஷிகள் ஒரு செயல் திட்டமாக தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), பனூ ஹாஷிம் மற்றும் பனூ முத்தலிப் கோத்திரத்தின் அனைத்து உறுப்பினர்களுடனும் எல்லா வகையான தொடர்புகளையும் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ளவில்லையாயின் அவர்களை ஓரிடத்தில் முற்றுகையிட்டு அழித்து விட வேண்டும் என்றும் முடிவெடுத்தனர். எனவே முஹர்ரம் மாதம் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் முறையாக ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டது. அதாவது எந்த நபரும் பனூ ஹாஷிம் மற்றும் பனூ முத்தலிப் குடும்பத்தினருடன் எந்த திருமண பந்தமும் செய்யக் கூடாது. மேலும் அவர்களுடன் எந்த கொடுக்கல் வாங்கலும் வைக்கக் கூடாது. அவர்களிடமிருந்து எந்தப் பொருளையும் வாங்கக் கூடாது. மேலும் எந்த உணவுப் பொருளையும் அல்லது குடிநீரையும் அவர்களுக்கு சென்றடைய விடக் கூடாது. மேலும் அவர்களுடன் எந்த வகையான தொடர்பும் வைக்கக் கூடாது. இன்றைய நாட்களில் சில அஹ்மதிகளுடனும் சில இடங்களில் இவ்வாறே நடந்து கொள்ளப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் அந்த நூலில் தொடர்ந்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து விலகி அன்னாரை தங்களிடம் ஒப்படைத்து விடாத வரை (அவ்வாறு செய்ய வேண்டும்) இந்த உடன்படிக்கையில் குரைஷியர்களுடன் பனூ கினானா கோத்திரமும் இணைந்திருந்தது. முறையாக உடன்படிக்கை எழுதப்பட்டது. அதில் அனைத்து பெரும் பெரும் தலைவர்களும் கையொப்பம் இட்டனர். மேலும் பின்னர் சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உடன்படிக்கை என்ற அடிப்படையில் காபாவின் சுவர்களில் அது தொங்க விடப்பட்டிருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பனூ ஹாஷிம் மற்றும் பனூ முத்தலிப் கோத்திரத்தைச் சார்ந்த முஸ்லிம் என்ன? நிராகரிப்பாளர் என்ன? அனைவரும். தனது பகைமையின் உத்வேகத்தில் குரைஷிகளுடன் இணைந்திருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூலஹபைத் தவிர மற்ற அனைவரும் ஒரு பள்ளத்தாக்கில் முற்றுகையிடப்பட்டிருந்தார்கள். இவ்வாறு குரைஷிகளின் இரு பெரும் கோத்திரங்களின் நாகரீக வாழ்க்கையின் தொடர்பு செயல் ரீதியாக முற்றிலும் துண்டிக்கப்பட்டிருந்தது. ஷஅப் அபி தாலிப் பனூ ஹாஷிமின் பள்ளத்தாக்காக இருந்தது. அவர்கள் கைதிகளைப் போன்று வீட்டில் சிறை வைக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் எண்ணிக்கையில் குறைவாக இருந்த ஏனைய சில முஸ்லிம்களும் அன்னாருடன் இருந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 166)

இந்த கடினமான நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விடவில்லை. எனவே ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்: குரைஷிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுப்பதற்கு ஒன்றுபட்டபோது அவர்கள் ஓர் ஆவணத்தில் இவ்வாறு எழுதினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அந்த கடினமான காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். எனவே இந்த

சம்பவத்தை குறித்து அபூதாலிப் அவர்கள் இந்த கவிதையை கூறினார்கள்:

هُمُ رَجَعُوْا سَهْلَ ابْنَ بَيْضَاءَ رَاضِيًا

فَسُرَّ أَبُوْ بَكْرٍ بِهَا وَ مُحَمَّدٌ

அன்னார் சஹல் பின் லைலா அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியவாறு திருப்பி அனுப்பியபோது அபூபக்ரும், முஹம்மது (ஸல்) அவர்களும் மகிழ்ச்சியடைந்து விட்டனர்.

(ஸய்யிதுனா சித்தீக் அக்பர் (ரலி) கே ஷப் வ ரோஸ் பக்கம் 30)

அதாவது மக்கத்து குரைஷிகள் சமுதாய புறக்கணிப்பு உடன்படிக்கையை முறித்துக் கொண்டபோது அபூதாலிப் கூறிய கவிதைகளில் இந்த ஒரு கவிதையும் இடம் பெற்றுள்ளது. சமூக புறக்கணிப்பு முடிவுற்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகிய இருவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

غُلِبَتِ الرُّوْمُ என்பதன் முன்னறிவிப்பு குறித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதில் நிபந்தனை விதித்தது குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது.

الٓمّٓ - غُلِبَتِ الرُّوْمُ - فِيْ اَدْنَى الْاَرْضِ என்ற அல்லாஹ்வின் கட்டளை குறித்து ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பு வருகின்றது. غُلِبَتْ மற்றும் غَلَبَتْ என்று அன்னார் கூறினார்கள். ரோமானியர்களை பாரசீகர்கள் வெற்றி கொள்ள வேண்டும் என்று இணை வைப்பவர்கள் விரும்பி வந்தனர். ஏனென்றால் அவர்கள் சிலை வணங்கிகளாக இருந்தனர். ரோமானியர்கள் பாரசீகர்கள் மீது வெற்றி கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பி வந்தனர். ஏனென்றால் அவர்கள் வேதம் பெற்ற மக்களாக இருந்தனர். அன்னார் இது குறித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இது குறித்து கூறினார்கள். அப்போது அவர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அவர்களிடம் அதாவது நிராகரிப்பாளர்கள் மற்றும் இணை வைப்பவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இது குறித்து கூறினார்கள். அப்போது எங்களுக்கும், உங்களுக்கும் மத்தியில் ஒரு காலக்கெடுவை நிர்ணயித்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் கூறினர். நாங்கள் வெற்றி பெற்று விட்டால் எங்களுக்கு இன்ன இன்ன விஷயங்கள் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள் என்றால் உங்களுக்கு இன்ன இன்ன விஷயம் கிடைக்கும் என்று கூறினர். அதாவது அதில் பந்தயம் கட்டினார்கள். எனவே அவர்கள் 5 ஆண்டு காலக்கெடுவை நிர்ணயித்தார்கள். அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அன்னார் இதனைக் குறிப்பிட்டபோது நீங்கள் இதை விட அதிகமாக காலக்கெடுவை ஏன் நிர்ணயிக்கவில்லை? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்து பத்தாக (பத்து ஆண்டாக) இருந்தது என்பது எனது எண்ணமாகும். திர்மிதியில் அப்வாப் தஃப்ஸீரில் இதன் அறிவிப்பு வருகின்றது. (சுனன் திர்மிதி, அப்வாபுத் தஃப்ஸீர்... ஹதீஸ் எண் 3193)

சஹீஹ் புகாரியின் ஓர் அறிவிப்பில் மிகவும் மகிமையுடன் நிறைவேறிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நான்கு முன்னறிவிப்புகளைப் பற்றிய நற்குறிப்பு இடம் பெற்றுள்ளது. அந்த முன்னறிவிப்புகளில் ரோம் வெற்றி குறித்த முன்னறிவிப்பும் அடங்கும். எனவே மஸ்ரூக் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் அவர்களுடன் இருந்தோம். மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்தார்கள். அப்போது அல்லாஹ்வே! யூசுப் (அலை) அவர்களின் காலத்தில் 7 வருட பஞ்சத்தை ஏற்படுத்தியதுபோன்று இவர்கள் மீதும் பஞ்சத்தை இறக்குவாயாக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். எனவே அவர்கள் மீது பஞ்சம் ஏற்பட்டது. அது அவர்களின் எல்லா பொருட்களையும் அழித்து விட்டது. எந்த அளவுக்கென்றால் இறுதியில் அவர்கள் தோலையும், இறந்தவற்றையும், சடலங்களையும் உண்டனர். அவர்களில் ஒருவர் விண்ணை நோக்கி பார்த்தால் பசியின் காரணமாக அவருக்கு புகை மட்டுமே தெரிந்து வந்தது.

அதில் குறிப்பிடப்பட்ட நான்கு முன்னறிவிப்புகளில் ஒரு சம்பவம் இதுவும் ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அபுசுஃப்யான் வந்தார். மேலும் தாங்கள் அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நடக்கின்றீர்கள். உறவுகளை பேணுகின்றீர்கள். தங்களின் சமுதாயம் அழிந்து விட்டதை தாங்கள் பாருங்கள். அல்லாஹ்விடம் அவர்களுக்காக துஆ செய்யுங்கள் என்று அவர் கூறினார். வானத்தில் ஒரு தெளிவான புகை கொண்டு வரப்படும் அந்த நாளுக்காக காத்திருங்கள் என்று அல்லாஹ் கூறியிருந்தான். நிச்சயமாக எந்த நாளில் நாம் மிகக் கடுமையாக பிடிக்கப்படுவோமோ நிச்சயமாக அந்த நாளைக் குறித்து திரும்ப திரும்ப கூறக் கூடியவராவீர்கள். இதுவே அந்த மாபெரும் தண்டனை பத்ர் போர் நாளன்று நடந்தது. எனவே புகைகளின் தண்டனைகள், கடுமையான பிடி மற்றும் லிஸாமா போன்ற முன்னறிவிப்பு ரோமானியர்கள் தொடர்பான முன்னறிவிப்பு ஆகிய இந்த அனைத்து விஷயங்களும் கூறப்பட்டு விட்டன. இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி ஹதீஸ் எண் 1007)

இந்த ஹதீஸின் விளக்கவுரையில் அல்லாமா பத்ருத்தீன் அய்னி அவர்கள் ரோமானியர்களின் வெற்றி தொடர்பான முன்னறிவிப்பை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்: பாரசீகர்களுக்கும், ரோமானியர்களுக்கும் இடையில் போர் நடந்தபோது ரோமானியர்கள் பாரசீகர்களை வெற்றி கொண்டு விட வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பி வந்தனர். ஏனென்றால் ரோமானியர்கள் வேதமுடைய மக்களாக இருந்தனர். அதே நேரத்தில் குரைஷிய நிராகரிப்பாளர்கள் பாரசீகர்களின் வெற்றியை விரும்பினார்கள். ஏனென்றால் அந்த பாரசீகர்களும் மஜூஷிகளாக இருந்து வந்தனர். குரைஷிய நிராகரிப்பாளர்களும் சிலை வணக்கத்தை செய்து வந்தனர். எனவே இந்த விஷயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் அபுஜஹிலுக்கு மத்தியில் பந்தயம் வைக்கப்பட்டது. அதாவது அவர்கள் ஒரு விஷயத்தில் தங்களுக்குள் சில ஆண்டுகளுக்கான காலக்கெடுவை நிர்ணயித்துக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு பிஸூஹ் என்ற சொல் உள்ளது என்று கூறினார்கள். பிஸூஹ் என்ற சொல் ஆனது 9 வருடம் அல்லது 7 வருடத்தை குறிக்கின்றது. எனவே காலக்கெடுவை நீட்டியுங்கள் என்று கூறினார்கள். அதனால் அன்னார் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவ்வாறே செய்தார்கள். மேலும் ரோமானியர்கள் வெற்றி பெற்று விட்டனர்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

الٓمّٓ ۚ﴿۲﴾ غُلِبَتِ الرُّوْمُ ﴿۳﴾ فِيْٓ اَدْنَى الْاَرْضِ

وَهُمْ مِّنْۢ بَعْدِ غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ ﴿۴﴾

فِيْ بِضْعِ سِنِيْنَ ۗ لِلّٰهِ الْاَمْرُ مِنْ قَبْلُ وَمِنْۢ

بَعْدُ ؕ وَيَوْمَئِذٍ يَّفْرَحُ الْمُؤْمِنُوْنَ ﴿۵﴾ بِنَصْرِ اللّٰهِ ؕ

மொழியாக்கம் இவ்வாறாகும்: الٓمّٓ என்பதன் பொருள் اَنَا اللّٰهُ اَعْلَمُ அல்லாஹ்வாகிய நான் எல்லாம் அறிந்தவன். ரோமானியர்கள் தோற்று விட்டனர். மேலும் அவர்கள் தமது தோல்விக்குப் பிறகு மீண்டும் அருகில் இருந்த பூமியில் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். 3 முதல் 9 ஆண்டு காலக்கெடுவிற்குள் அல்லாஹ்வின் கட்டளை என்பது தெரிய வருகின்றது. முன்னும், பின்னும் ஆட்சியதிகாரம் அல்லாஹ்விற்கே உரியதாகும். மேலும் அந்த நாளில் அல்லாஹ்வின் உதவியால் கிடைக்கும் வெற்றிகளால் நம்பிக்கையாளர் அதிகமாக மகிழ்ச்சியடைவார்.

ஷஃபி கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் நிபந்தனை விதிப்பது ஆகுமானதாக இருந்தது.

(அம்தத்துல் காரி, ஷரஹ் சஹீஹுல் புகாரி தொகுதி 7 பக்கம் 46 ஹதீஸ் எண் 1007 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இது குறித்து இவ்வாறு எழுதுகின்றார்கள்: இஸ்லாத்திற்கு முன்பும், இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலும் உலகம் முழுவதும் மிகவும் அதிக வலிமை படைத்த மேலும் மிக அதிகமாக பரந்து விரிந்த இரண்டே பேரரசுகள் தான் இருந்தன. ஒன்று பாரசீக பேரரசாங்கம். மற்றொன்று ரோமானிய பேரரசாங்கம். இந்த இரண்டு பேரரசாங்கங்களும் அரபு நாட்டிற்கு அருகில் அமைந்திருந்தன. பாரசீக பேரரசாங்கம் அரபு நாட்டின் வட கிழக்கில் இருந்தது. ரோமானிய பேரரசாங்கம் வட மேற்கில் அமைந்திருந்தது. இந்த பேரரசாங்கங்களின் எல்லைகள் இணைந்திருந்தன. எனவே சில நேரங்களில் அவர்கள் தங்களுக்குள் போரிட்டு வந்தனர். இந்த பேரரசாங்கங்கள் மிகவும் தலைதூக்கி இருந்த அந்த காலத்தைப் பற்றி குறிப்பு வருகின்றது. இது முன்னறிவிப்பு நிகழ்ந்த அந்த காலத்து விஷயமாகும். பாரசீக பேரரசாங்கம் ரோமானிய பேரரசாங்கத்தை தோற்கடித்திருந்தது. மேலும் அதன் மிக விலை உயர்ந்த பகுதிகளை பறித்துக் கொண்டிருந்தது. மேலும் தொடர்ந்து அவர்களை வீழ்த்திக் கொண்டே சென்றது. குரைஷிகள் சிலை வணங்கிகளாக இருந்தனர். பாரசீகர்களுக்கும் சற்று ஏறக்குறைய அதே மார்க்கம் தான்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

இருந்தது. எனவே மக்கத்து குரைஷிகள் பாரசீகர்களின் இந்த வெற்றியின் மீது மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தனர். ஆனால் ரோமானிய பேரரசாங்கத்துடன் முஸ்லிம்கள் அனுதாபம் கொண்டிருந்தனர். ஏனென்றால் ரோமானிய பேரரசாங்கம் கிறிஸ்துவ அரசாங்கமாக இருந்தது. கிறிஸ்துவர்கள் வேதத்தை பெற்றிருந்ததாலும், ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரியின் தொடர்பின் காரணமாகவும், சிலை வணக்கம் மற்றும் மஜூஷிய சமுதாயத்திற்கிடையில் அவர்கள் மிகவும் நெருக்கமாக இருந்தனர். அதுபோன்ற நிலைமையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து ஞானத்தைப் பெற்று இவ்வாறு முன்னறிவிப்பு செய்தார்கள். தற்போது ரோமானியர்கள் பாரசீகர்களிடம் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில ஆண்டுகளுக்குள் அவர்கள் பாரசீகர்களை வெற்றி பெற்று விடுவார்கள். அந்த நாளில் நம்பிக்கையாளர் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்கள்.

இந்த முன்னறிவிப்பை கேட்டு விட்டு முஸ்லிம்கள் குறிப்பாக அதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னார் மக்காவில் இவ்வாறு பொதுவான அறிவிப்பை செய்யத் தொடங்கி விட்டார்கள். நமது இறைவன் நமக்கு இந்த செய்தியை கூறியுள்ளான். மிக விரைவில் ரோமானியர்கள் பாரசீகர்களை வென்று விடுவார்கள் என்று கூறினார்கள். அப்போது இந்த முன்னறிவிப்பு உண்மையானது என்றால் பின்னர் வாருங்கள். பந்தயம் வைத்துக் கொள்ளலாம் என்று குரைஷிகள் பதில் கொடுத்தனர். அந்த நேரம் வரை இஸ்லாத்தில் நிபந்தனைகள் விதிப்பதற்கு தடை செய்யப்படவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். குரைஷிய தலைவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கிடையே வெற்றி தோல்வி குறித்து சில ஒட்டகங்கள் பந்தயமாக நிர்ணயிக்கப்பட்டன. 6 ஆண்டு காலக்கெடு என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தபோது 6 ஆண்டு காலத்தை காலக்கெடுவாக நிர்ணயித்தது தவறாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஏனென்றால் அல்லாஹ் பிஹ்ஸினீன் என்ற சொல்லில் காலக்கெடு தொடர்பாக குறிப்பிட்டுள்ளான். அது அரபு மொழி வழக்கப்படி 3 முதல் 9 ஆண்டுகளுக்கு கூறப்படும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலேயே தங்கியிருந்தபோதும் ஹிஜ்ரத் செய்யாமல் இருந்தபோதும் நிகழ்ந்த விஷயம் ஆகும். அதன் பிறகு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் போரின் நிலை திடீரென மாறியது. ரோமானியர்கள் பாரசீகர்களை தோற்கடித்து குறுகிய காலத்திலேயே ஏனைய அனைத்துப் பகுதிகளையும் திரும்ப பறித்துக் கொண்டார்கள். இது ஹிஜ்ரத்திற்குப் பிறகு நிகழ்ந்த விஷயமாகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 216, 217)

இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது மக்காவிலேயே இருந்தார்கள். அந்நிலையில் அரபு நாட்டில் ஈரானியர்கள் ரோமானியர்களை தோற்கடித்து விட்டனர் என்ற செய்தி மிகவும் பிரபலமானது. அதை செவியுற்று நாமும் இணை வைப்பவர்கள் ஆவோம். ஈரானியர்களும் இணை வைப்பவர்கள் ஆவர் என்று மக்காவாசிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஈரானியர்கள் ரோமானியர்களை தோற்கடிப்பது என்பது ஒரு நல்ல சகுணமாகும். இதன் ஒரு பொருள் என்னவென்றால், முஹம்மது (ஸல்) அவர்கள் மீது மக்காவாசிகளும் வெற்றி பெற்று விடுவார்கள் என்று கருதினர். இவ்வாறு அவர்கள் இதனை நல்ல சகுணமாக கருதினர். ஆனால்

غُلِبَتِ الرُّوْمُ ۙ﴿۳﴾ فِيْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ بَعْدِ

غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ என்று அல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினான். ரோமானிய அரசாங்கத்திற்கு சிரியாவின் பகுதியில் நிச்சயம் தோல்வி ஏற்பட்டது. ஆயினும் இந்த தோல்வியை நீங்கள் இறுதியானதாக கருதாதீர்கள். தோல்வியுற்ற பிறகு மீண்டும் 9 ஆண்டுகளுக்குள் ரோமானியர்கள் வெற்றி பெற்று விடுவார்கள் என்ற இந்த முன்னறிவிப்பு வெளியானபோது மக்காவாசிகள் மிகவும் எள்ளி நகையாடினர். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சில நிராகரிப்பாளர்கள் 100 ஒட்டகத்திற்கான பந்தயத்தை கட்டினர். இத்தனை பெரிய தோல்விக்குப் பிறகும் கூட ரோமானியர்கள் மீண்டும் முன்னேறி விட்டால் நாங்கள் உமக்கு 100 ஒட்டகங்களைக் கொடுப்போம். ஒருவேளை அவ்வாறு நடக்கவில்லையென்றால் நீங்கள் எங்களுக்கு 100 ஒட்டகங்கள் கொடுக்க வேண்டும் என்று பந்தயம் கட்டினர். வெளிப்படையில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கான வாய்ப்பு மிகவும் சாத்தியமற்றதாக சென்று கொண்டிருந்தது. சிறிய தோல்விக்குப் பிறகு ரோமானிய படை தொடர்ந்து பல தோல்விகளை கண்டு பின்வாங்கிக் கொண்டே சென்றது. எந்த அளவுக்கென்றால் ஈரானிய படைகள் மர்மரா கடலின் எல்லை வரை வந்தடைந்து விட்டது. கிஸ்தன்தீனியா தனது ஆசிய அரசாங்கங்களிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு விட்டது. மேலும் ரோமானியர்களின் வலிமைமிக்க பேரரசாங்கம் ஒரு மாநிலமாக ஆகி விட்டது. ஆனால் இறைவனின் கூற்று நிறைவடைய வேண்டியதிருந்தது. மேலும் நிறைவடைந்தது. மிகவும் நிராசையடைந்த நிலையில் ரோமானிய அரசர் தமது போர் வீரர்களிடம் இறுதி தாக்குதலுக்காக கிஸ்தன்தீனியாவிலிருந்து வெளியேறினார். ஆசிய கடற்கரையில் ஓரித்தில் ஈரானியர்களுடன் ஓர் இறுதி கட்ட போரை நிகழ்த்தினர். ரோமானிய வீரர்கள் எண்ணிக்கையிலும், தளவாடங்களிலும் குறைவாக இருந்தபோதிலும் திருக்குர்ஆன் முன்னறிவிப்பிற்கேற்ப ஈரானியர்கள்களை வெற்றி கொண்டு விட்டார்கள். மேலும் ஈரானிய படை எந்த அளவுக்கு தலைதெறிக்க ஓடியது என்றால் ஈரானிய எல்லைகளில் எந்தவோர் இடத்திலும் அவர்களின் பாதங்கள் நிலைபெற முடியவில்லை. பின்னர் மீண்டும் ரோமானிய அரசாங்கம் ஆப்ரிக்கா மற்றும் ஆசியாவின் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 445)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அபுஜஹிலுடன் பந்தயம் கட்டினார்கள். அந்த பந்தயம் திருக்குர்ஆனின் இந்த முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

غُلِبَتِ الرُّوْمُ ۙ﴿۳﴾ فِيْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ

بَعْدِ غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ ۙ﴿۴﴾ فِيْ بِضْعِ سِنِيْنَ

மேலும் 3 ஆண்டு காலகட்டம் நிர்ணயிக்கப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பின் நிலையைப் கருத்தில் கொண்டு உடனடியாக தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டார்கள். பந்தயத்தில் முடிந்த வரை மாற்றங்கள் செய்வதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். முன்னறிவிப்பில் بِضْعِ سِنِيْنَ என்ற சொல் வந்துள்ளது. அது பெரும்பாலும் 9 வருடங்கள் வரை குறிக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 310, 311)

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோத்திரங்களுக்கு முன்னால் தம்மை முன்னிறுத்துவது அதாவது தமது வாதத்தை எடுத்துரைப்பது மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களுக்கு துணையாக இருப்பது (தொடர்பான விஷயங்கள்).

அல்லாஹ் தனது மார்க்கத்தை மேலோங்கச் செய்வதற்கும், தனது தூதருக்கு கண்ணியத்தை வழங்குவதற்கும், தனது வாக்குறுதியை முழுமை செய்வதற்கும் எண்ணம் கொண்டான். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜின் நாட்களில் வெளியே புறப்பட்டிருந்தார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த அன்ஸார் கூட்டத்தினரை அன்னார் (ஸல்) சந்தித்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் செய்து வந்ததைப்போன்று ஹஜ்ஜின் நாட்களில் தம்மைத்தாமே முன்னிறுத்தினார்கள். எனவே ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டான். அதாவது அவர்கள் அரபு கோத்திரத்திற்கு முன்னால் தம்மை முன்னிறுத்த வேண்டும். எனவே நானும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மினாவை நோக்கி புறப்பட்டோம். எந்த அளவுக்கென்றால் நாங்கள் அரேபியர்களின் ஒரு சபைக்கு அருகில் சென்றோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முன்னால் சென்றார்கள். அன்னார் குடும்ப பாரம்பரியத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள். நீங்கள் எந்த சமுதாயத்தை


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

சார்ந்தவர்கள்? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு ரபீஆ கோத்திரம் என்று அன்னார் கூறினார்கள். ரபீஆ எந்த கோத்திரத்தின் கிளையாகும்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள் துஹல் கோத்திரத்தின் கிளை என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் சபையில் சென்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார் என்ற பெயரை இந்த மக்களுக்கே வழங்கினார்கள். ஏனென்றால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி மற்றும் அடைக்கலம் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் அங்கிருந்து எழுந்து விட்டோம். எந்த அளவுக்கென்றால் அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 72–74 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றோர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நீங்கள் அரபு கோத்திரத்திற்கு முன்னால் உங்கள் வாதத்தை எடுத்து வையுங்கள் என்று அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டளை வழங்கினான். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நோக்கத்திற்காக புறப்பட்டார்கள். நானும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னார் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். நாங்கள் ஒரு சபையை அடைந்தோம். அதில் அமைதியும், கண்ணியமும் இருந்தது. அந்த மக்கள் மிக உயர்ந்த அந்தஸ்தை உடையவர்களாகவும், கண்ணியமுடையவர்களாகவும் இருந்தார்கள். நீங்கள் எந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்? என்று அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். நாங்கள் பனூ ஷைபான் பின் சஃலபாவைச் சார்ந்தவர்கள் ஆவோம் என்று அவர்கள் கூறினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, எனது தாயும், தந்தையும் தங்கள் (ஸல்) மீது அர்ப்பணமாகட்டுமாக. இந்த சமுதாயத்தில் இவர்களை விட கண்ணியத்திற்குரியவர்கள் வேறு எவரும் இல்லை என்று கூறினார்கள். அந்த மக்களில் மஃப்ரூக் பின் அம்ர், முஸன்னா பின் ஹாரிஸா, ஹானி பின் கபீஸா மற்றும் நுஃமான் பின் ஷரீக் ஆகியோர் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் இந்த வசனத்தை ஓதினார்கள்.

قُلْ تَعَالَوْا اَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ اَلَّا تُشْرِكُوْا
بِهٖ شَيْـًٔا وَّبِالْوَالِدَيْنِ اِحْسَانًا ۚ وَلَا تَقْتُلُوْٓا
اَوْلَادَكُمْ مِّنْ اِمْلَاقٍ ؕ نَحْنُ نَرْزُقُكُمْ
وَاِيَّاهُمْ ۚ وَلَا تَقْرَبُوا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا
وَمَا بَطَنَ ۚ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِيْ حَرَّمَ اللّٰهُ
اِلَّا بِالْحَقِّ ؕ ذٰلِكُمْ وَصّٰىكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ

பொருள்: நீர் கூறுவீராக. வாருங்கள். உங்கள் இறைவன் உங்களுக்கு தடுத்தவற்றை நான் உங்களுக்கு படித்துக் காட்டுகின்றேன். நீங்கள் எப்பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோரிடத்தில் மிக நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள். நாமே உங்களுக்கும், அவர்களுக்கும் உணவு அளிக்கின்றோம். தீமைகள் வெளிப்படையாக இருப்பினும், மறைமுகமாய் இருப்பினும் அவற்றின் பால் நெருங்காதீர்கள். அல்லாஹ் தடுத்துள்ள உயிரை (சட்ட அனுமதியின்றி) கொலை செய்யாதீர்கள். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அல்லாஹ் இது குறித்து உங்களுக்கு கட்டளையிடுகின்றான்.

இந்த வசனம் பூமியில் வசிப்பவர்களின் கூற்றல்ல. இது அவர்களின் கூற்றாக இருந்திருந்தால் பின்னர் நிச்சயம் நாங்கள் அதனை அறிந்திருப்போம் என்று மஃப்ரூக் என்பவர் அப்போது கூறினார். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்.

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآئِ
ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ
وَالْبَغْيِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்யும்படியும், நன்மை செய்யும்படியும், உறவினர்களுக்கு கொடுப்பதைப்போல கொடுக்கவும் கட்டளையிடுகின்றான். மேலும் எல்லா வகை வெட்கக் கேட்டிலிருந்தும், வெறுக்கத்தக்கவற்றிலிருந்தும், வரம்பு மீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். இந்த கூற்றை கேட்ட பிறகு மஃப்ரூக் இவ்வாறு கூறினார்: குரைஷிய சகோதரரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் (ஸல்) உயர்ந்த நல்லொழுக்கம் மற்றும் அழகிய பணிகளின் பக்கம் அழைத்துள்ளீர்கள். மேலும் எந்த சமுதாயம் தங்கள் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்தியதோ அது மிகவும் பொய்யான சமுதாயம் ஆகும். மேலும் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக ஒன்றுக்கொன்று உதவி செய்தது.

முஸன்னா இவ்வாறு கூறினார்: நாங்கள் தங்களின் கூற்றை செவிமடுத்து விட்டோம். குரைஷிய சகோதரரே! மிகச் சிறந்த உரையாடலை தாங்கள் (ஸல்) நிகழ்த்தியுள்ளீர்கள். தாங்கள் கூறிய விஷயங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டன. ஆயினும் நாங்கள் எந்தவொரு புதிய பணியும் செய்ய மாட்டோம். எந்தவொரு புதிய பணியை செய்பவருக்கும் அடைக்கலம் வழங்க மாட்டோம் என்று நாங்கள் சீசருடன் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். அரசர் விரும்பாத ஒரு காரியத்தின் பக்கம் தாங்கள் எங்களை அழைத்துள்ளீர்கள். அரபு கோத்திரங்கள் மற்றும் சுற்று வட்டாரத்திலுள்ள கோத்திரங்களுக்கு எதிராக நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும். மேலும் உங்களை பாதுகாக்க வேண்டும் என்று தாங்கள் விரும்பினால் நாங்கள் அவ்வாறு செய்வோம். அப்போது உங்கள் பதிலில் எந்தத் தீமையும் இல்லை. நீங்கள் விளக்கத்துடன் உண்மையை வெளிப்படுத்தியுள்ளீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவரை அல்லாஹ் எல்லா புறமிருந்தும் கட்டுப்பாட்டில் எடுத்துள்ளானோ அவரே அல்லாஹ்வின் மார்க்கத்தில் நிலை நிற்க முடியும். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரத்தை பிடித்தார்கள். மேலும் எழுந்து சென்று புறப்பட்டு விட்டார்கள்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 309, 310 அறிவிப்பு எண் 6382 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை குறுகிய காலத்தில் அல்லாஹ் உங்களுக்கு கிஸ்ராவின் பூமி மற்றும் நாட்டிற்கு வாரிசாக்கி விட்டால், மேலும் அவர்களின் பெண்கள் உங்களின் கட்டுப்பாட்டில் வந்து விட்டால் நீங்கள் அல்லாஹ்வின் தூய்மை மற்றும் பரிசுத்தத்தை எடுத்துரைப்பீர்களா? என்றும், இது தொடர்பாக உங்களின் எண்ணம் என்ன? என்றும் கேட்டார்கள். அதற்கு அவர்கள் இறைவன் மீது ஆணையாக! நாங்கள் தயாராக உள்ளோம் என்று கூறினர். இறைவனின் வல்லமையைப் பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்று சொல்லுக்கு சொல் முழுமையடைந்தது. ஒரு நேரத்தில் சீஸரின் வலிமையைக் கண்டு அஞ்சி, அவனது அதிருப்தியின் அச்சத்திற்கு உள்ளாகி இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு தயங்கிக் கொண்டிருந்த அதே முஸன்னா பின் ஹாரிஸா தான் சிறிது காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அதே சீஸருக்கு எதிராக நடைபெற்ற போரில் இஸ்லாமிய படையின் தளபதியாக இருந்தார்கள். அன்னார் கிஸ்ராவை மண்ணை கவ்வச் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செய்திகளை உண்மைப்படுத்தக் கூடியவராகவும் ஆகி விட்டார்கள்.

(ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி), ஷக்ஸிய்யத் அவ்ர் கார்னாமே பக்கம் 82, 84)

இதேபோன்று ஒரு ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தில் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது. பக்ர் பின் அவாயில் கோத்திரம் ஹஜ் செய்வதற்காக மக்கா வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்களிடத்தில் செல்லுங்கள். மேலும் என்னை அவர்களுக்கு முன்னால் நிறுத்துங்கள். அதாவது தப்லீக் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதத்தை எடுத்துரையுங்கள் என்பது இதன் பொருளாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர்களிடத்தில் அழைத்து சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாத்தை குறித்து தப்லீக்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

செய்தார்கள்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 2 பக்கம் 7 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எஞ்சியவை இன்ஷா அல்லாஹ் எதிர் வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

இன்று நான் ஆப்கானிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆவிற்கு கூற விரும்புகின்றேன். அவர்கள் மிகுந்த துன்பத்தை கடந்து வருகின்றனர். சிலர் கைதும் செய்யப்பட்டிருக்கின்றார்கள். பெண்கள், சிறுவர்கள், பெரியவர்கள் தமது வீடுகளில் நிம்மதியிழந்துள்ளனர். வெளியிலுள்ள மற்றும் கைது செய்யப்படாத ஆண்களும் கூட வீட்டை இழந்துள்ளனர். ஏனென்றால் கைது செய்யப்பட்டு விடுவோம் என்ற அபாயம் உள்ளது. அல்லாஹ் அவர்களுக்கு எளிமையை உருவாக்குவானாக. மேலும் இந்த கஷ்டத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவானாக.

அடுத்து பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் பொதுவாக நிலைமைகள் மோசமாகவே இருக்கின்றன. இங்கேயாவது ஏதாவதொரு சம்பவம் நிகழ்ந்து விடுகின்றது. அந்த மக்கள் அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதேபோன்று ஒட்டுமொத்தமாகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அடையாளம் காண்பதற்கு உலகிற்கு நற்பேறு வழங்குவானாக. மேலும் எல்லா தீங்குகளையும் அகற்றுவானாக. மேலும் உலகம் தன்னைப் படைத்த அந்த இறைவனின் உண்மைத்துவத்தை அடையாளம் கண்டு கொள்ளட்டுமாக.

இதன் பிறகு நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். (தொழுகைக்குப்) பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவேன்.

முதலாவது நற்குறிப்பு அல்ஹாஜ் அப்துர் ரஹ்மான் இனீன் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கானியனாக (கானா நட்டைச் சார்ந்தவராக) இருந்தார்கள். கானாவின் முன்னாள் உமூரே ஆமா செயலராகவும், ஜல்ஸா ஸாலானா உயர் அதிகாரியாகவும் இருந்தார்கள். 81 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அவர்களின் தாய், தந்தையர் இருவரும் அஹ்மதிகளாக இருந்தனர். அவர்களின் பெற்றோர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தனர். மர்ஹூம் எகிப்தில் உயர் கல்வியைப் பெற்றார்கள். பின்னர் அங்கிருந்து உயர் கல்வி பெற்ற பிறகு தமது செயல் வாழ்க்கையை ஆரம்பம் செய்தார்கள். இங்கு கானாவிற்கு வந்து பல்வேறு கம்பெனிகளில் மேனேஜர் என்ற அந்தஸ்தில் பணி செய்தார்கள். பின்னர் அன்னார் நைஜீரியாவிலும் சிறிது காலம் பணி செய்தார்கள். அடுத்து அன்னார் சுயமே ஒரு கம்பெனியை திறந்தார்கள். அதன் Managing Director ஆகவும் அன்னார் இருந்தார்கள். மிகவும் நல்ல, தூய மனிதராக இருந்தார்கள். முன்னுதாரணமான தொண்டாற்றும் நற்பேறு அவர்களுக்கு கிடைத்து வந்தது. வாழ்நாள் முழுவதும் ஜமாஅத் நலனிற்கும், பணிகளுக்கும் தனது தனிப்பட்ட நலனை விட முன்னுரிமை வழங்கினார்கள். பல்வேறு பொறுப்புகளில் இருந்து தொண்டாற்றும் நற்பேறு பெற்று வந்தார்கள். எப்போதும் ஜமாஅத் அமீருக்கு கட்டுப்பட்டு எல்லா குரலுக்கும் செவிமடுப்பதை தமது நற்பேறாக கருதி வந்தார்கள். பெரும்பாலான நேரத்தில் காலையில் முதல் நேரத்திலேயே மிஷனிற்கு வருகை தந்து அமீர் சாஹிப் அவர்களை சந்திப்பார்கள். மேலும் (ஜமாஅத் பணிகளை குறித்து) விசாரித்து வருவார்கள். ஏதாவது ஜமாஅத் பணி இருந்தால் முதலில் அதை செய்து முடிப்பார்கள். பின்னர் தமது பணிக்காக செல்வார்கள். அன்னார் Greater Accra Region ல் நீண்ட காலமாக சதராக இருந்துள்ளார்கள். 1989 முதல் 1998 வரை மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் தலைவராக இருந்துள்ளார்கள். உமூரே ஆமா செயலராக அன்னார் நீண்ட காலம் பணி செய்துள்ளார்கள். பின்னர் ஆண்டு மாநாட்டின் அதிகாரியாகவும் பணி செய்யும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. மேலும் மரண நேரத்தில் தேசிய டிரஸ்டி எந்த அந்தஸ்தில் தொண்டிற்கான நற்பேறு பெற்று வந்தார்கள்.

எல்லாரின் உதவிக்காகவும் எல்லா நேரத்திலும் தயாராக இருந்து வந்தார்கள். மிகவும் வள்ளலாக இருந்து வந்தார்கள். அனுதாபம் என்பதை அன்னார் தமது குடும்பத்தினர் வரை மட்டுமே வைத்திருக்கவில்லை. மாறாக, அன்னாரின் வள்ளல்தன்மை அன்பர்கள், உறவினர்கள் ஆகியோர் மட்டுமின்றி ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் மார்க்க வித்தியாசமில்லாமல் தெரு வாசிகள் உட்பட அனைவருக்கும் அனுதாபத்தை பரந்ததாக கொண்டிருந்தார்கள். ஜமாஅத்தின் நன்றியுணர்வு மிக்க மற்றும் கிலாஃபத்தின் மீது உயிரை அர்ப்பணிக்கக் கூடிய வீரராக இருந்தார்கள். எப்போதும் ஜமாஅத்தின் நலனிற்கு எல்லா விஷயத்தை விடவும் முன்னுரிமை வழங்கினார்கள். ஒருபோதும் எந்த எதிர்ப்பையும் எவ்வகையிலும் பொருட்படுத்தியதில்லை. தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். முறையாக தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வந்தார்கள். வீட்டில் இருக்கும்போதும் பயணத்திலும், எல்லா இடத்திலும் அதனை பேணி வந்தார்கள். மூஸியாக இருந்தார்கள். தொடர்ந்து சந்தா செலுத்தி வந்தார்கள். ஒரு மனைவி மட்டுமின்றி ஐந்து மகன்களையும், ஐந்து மகள்களையும் அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள்.

கானாவின் முரப்பி ஹாஃபிழ் முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூமிடத்தில் மிகுந்த அகப்பார்வை இருந்தது. மிக சுருக்கமாக நுட்பமாக பேசி வந்தார்கள். உடனடியாக விவகாரத்தின் அடி ஆழம் வரை சென்று விடுவார்கள். ஒரு முறை நிர்வாக கூட்டத்தின்போது ஒவ்வொருவரும் தமது கருத்தை கூறிக் கொண்டிருந்தார்கள். ஒரு விவகாரம் நீட்டிக்கப்பட்டுக் கொண்டே சென்றது. அன்னார் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குரிய சந்தர்ப்பம் வந்தபோது அன்னார் கூறினார்கள்: இது குறித்து காலத்தின் கலீஃபாவிடமிருந்து ஒரு தீர்ப்பு வந்து விட்டது. எனவே நாம் இது குறித்து விவாதிப்பதற்கு அவசியமில்லை. ஏனென்றால் காலத்தின் கலீஃபாவின் புறமிருந்து தீர்ப்பு வந்து விட்டால் பின்னர் எவரும் எந்தக் கருத்தும் கூறக் கூடாது. மாறாக, நாம் அதனை அப்படியே செயல்படுத்தி விட வேண்டும் என்று கூறினார்கள். இதுபோன்ற கலப்படமற்ற தூயவர்களை அல்லாஹ் தொலைதூர பகுதிகளிலும் வழங்கி இருக்கின்றான்.

அடுத்த நற்குறிப்பு கடந்த நாட்களில் வஃபாத்தான அஸ்பாப் அலி முஹம்மது அல்ஜாலி சாஹிப் அவர்களுடையதாகும். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் உர்தன் ஜமாஅத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். உர்தன் ஜமாஅத்தின் தலைவர் இவ்வாறு எழுதுகின்றார்: மர்ஹூம் 2010 ஆம் ஆண்டில் பைஅத் செய்திருந்தார். தமது பகுதியில் தனித்த அஹ்மதியாக இருந்தார். இங்குள்ள சம்பிரதாயங்களுக்கேற்ப ஒருவரது மனைவியும், குடும்பமும் கணவரின் வழியில் அதே மார்க்கத்தில் வந்து விடுகின்றனர். எனவே அவரும் (மனைவியும்) அஹ்மதியாகி விட்டார்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத்தின் மீது மர்ஹூமின் ஈமான் மலையைப் போன்று உறுதியானதாக இருந்தது. அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதன் காரணத்தால் குடும்பம் மற்றும் ஏனைய எதிரிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் மர்ஹூம் உறுதிப்பாட்டிற்கான ஒரு முன்னுதாரணமாக இருந்தார்கள். அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத்திற்காக மிகவும் தன்மானம் கொண்டிருந்தார்கள். மிக வலிமையுடன் தற்காத்து வந்தார்கள். மர்ஹூமிற்கு கல்வி கற்பதற்கும், தப்லீக் செய்வதற்கும் மிகுந்த ஆர்வம் இருந்தது. சில முறை நீண்ட இரவிலும் கூட போன் செய்து விவகாரங்கள் குறித்து கேட்டு வந்தார்கள். அதேபோன்று அன்னாருடைய வீட்டில் எதிரிகள் மற்றும் உறவினர்களுடன் பல முறை தப்லீக் அமர்வுகள் நிகழ்ந்துள்ளன. மர்ஹூம் சர்க்கரை நோயாளியாக இருந்தார்கள். மிக அதிகமான துன்பத்தில் இருந்தார்கள். இதன் காரணமாக இந்த நோய் உயிரைப் பறிக்கும் நோயாக ஆகி விட்டது. அன்னாரின் சில உறவினர்கள் இந்த நோய்வாய்ப்பட்ட நிலையில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாகத்தான் உமக்கு இந்த நிலைமை என்று கூறி வந்தார்கள். நீ அஹ்மதிய்த்தை விட்டு விடு. நாங்கள் கியாமத் நாளன்று உனக்கு ஆதரவாக சாட்சி கூறுவோம் என்று கூறினர். அப்போது இறைவா! என்னை அஹ்மதி முஸ்லிமான நிலையிலேயே மரணிக்கச் செய்வாயாக என்று மிக உத்வேகத்துடன் துஆ செய்வாறு கூறினார்கள்.

அடுத்த நற்குறிப்பு இன்றைய நாட்களில் கனடாவில் வசித்து வந்த ஓய்வு பெற்ற முரப்பி மதிப்பிற்குரிய தீன் முஹம்மது ஷாஹித் சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் 92 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தையின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னாரின் தந்தை 1938 ஆம் ஆண்டில் பைஅத் செய்வதற்கு நற்பேறு பெற்றார்கள். 1940 ஆம் ஆண்டில் அன்னாரின் தந்தையார் தம்முடன் அன்னாரை அழைத்துக் கொண்டு காதியான் ஆண்டு மாநாட்டிற்கு சென்றார்கள். அங்கு அன்னாரின் தந்தை காதியானின் கல்வி சூழல் மற்றும் மார்க்க சூழல் ஆகியவற்றின் தாக்கத்திற்குள்ளாகி அன்னாருக்கும் படிப்பதற்கான ஆர்வம் ஏற்பட்டது. அதை கருத்தில் கொண்டவாறு காதியானிலேயே அன்னாரின் 11 வது வயதில் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் (ரலி) அவர்களின் மேற்பார்வையில் அன்னாரை விட்டு விட்டார்கள். பின்னர் அன்னார் அங்கேயே

கல்வி கற்றார்கள். 1953 ஆம் ஆண்டில் அன்னார் ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து ஷாஹிது பட்டம் பெற்றார்கள். பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் முரப்பியாக பணி செய்தார்கள். 3,4 வருடம் ஃபிஜி தீவிலும் மிஷனரி இன்சார்ஜ் ஆக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். ரப்வாவில் நீண்ட காலம் Press செயலராக தொண்டாற்றும் நற்பேறும் கிடைத்தது. அன்னாருக்கு 4 புத்தகங்கள் எழுதுவதற்கு மட்டுமின்றி பல்வேறு அறிவார்ந்த கட்டுரைகள் எழுதுவதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. தப்லீக்கில் அன்னாருக்கு பேரார்வம் இருந்தது. புத்தம் புதிய வழிமுறைகளை அன்னார் மேற்கொண்டு வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். தனது மனைவி மட்டுமின்றி 3 மகன்களையும், 3 மகள்களையும் அன்னார் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த நற்குறிப்பு ஜல்ஸா ஸாலானா அலுவலக ஊழியரான மதிப்பிற்குரிய மியான் ரஃபீக் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். மர்ஹூம் கடந்த நாட்களில் 87 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் தந்தையின் பெயர் மர்ஹூம் மியான் பஷீர் அஹ்மது சாஹிப் ஆகும். பாகிஸ்தான் உருவாகுவதற்கு முன்பே அன்னார் காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்து கோயிட்டாவிற்கு வந்து விட்டார்கள். அங்கு அன்னாரின் தந்தைக்கு கோயிட்டா ஜமாஅத்தின் அமீராக தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியும், அன்னாரின் தந்தைவழிப் பாட்டனாருமான ஹஸ்ரத் டாக்டர் அப்துல்லாஹ் சாஹிப் மூலம் மியான் ரஃபீக் அஹ்மது சாஹிப் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றியது. 1960 ஆம் ஆண்டு மியான் ரபீக் சாஹிப் அவர்கள் லாஹூர் Engineering College லிருந்து Mecanical Engineering ல் BSC பட்டம் பெற்றார்கள். அதன் பிறகு அன்னார் பல்வேறு துறைகளில் பணி செய்து வந்தார்கள். பின்னர் தன்ஸானிய்யா சென்று விட்டார்கள். சுமார் 10 வருட காலம் தன்ஸானிய்யாவில் கழித்தார்கள். பின்னர் சிறிது காலம் ஒரு கம்பெனியில் பணி செய்தது மட்டுமின்றி கல்வி கற்பித்தும் வந்தார்கள். தன்ஸானிய்யாவிலும் அன்னாருக்கு செகரட்டரி மால் ஆக தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. 1986 ஆம் ஆண்டில் அன்னார் வக்ஃபே ஆர்ஸி திட்டத்தின் கீழ் ஜல்ஸா ஸாலானா அலுவலகத்தில் தொண்டுகள் ஆற்ற தொடங்கினார்கள். பின்னர் 1987 ஆம் ஆண்டில் ஜல்ஸா ஸாலானா அலுவலகத்தில் முறையாக ஊழியர் என்ற அடிப்படையில் பணி செய்யத் தொடங்கினார்கள். பின்னர் 1989 ஆம் ஆண்டில் வாழ்க்கையை அர்ப்பணித்து ஜல்ஸா ஸாலானா ரப்வாவின் அலுவலகத்தில் தொழில்நுட்பத் துறையில் நாஸிம் Technical என்ற அடிப்படையில் தொண்டுகள் ஆற்ற தொடங்கினார்கள். பின்னர் இறுதி மூச்சு வரை அதே தொண்டை ஆற்றி வந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரின் திருமணத்திற்கான வரனை செய்து வைத்தார்கள். மவ்லானா அபுல் அதா சாஹிப் அவர்கள் அன்னாரின் திருமணத்தை நடத்தினார்கள். அல்லாஹ் அன்னாருக்கு 3 மகன்களையும், 1 மகளையும் வழங்கியுள்ளான்.

அன்னாரின் மகன் இவ்வாறு கூறுகின்றார்: ஜமாஅத்திற்காக எதிராக எப்போதாவது, ஏதாவதொரு தவறான விஷயம் பேசப்பட்டால் உடனடியாக அதைத் தடுத்து விடுவார்கள். கிலாஃபத்தின் மீது அன்னாருக்கு எல்லையற்ற அன்பு இருந்தது. ஒரு முறை குடும்பத்தின் ஒரு உறுப்பினர் அல்லது வீட்டிற்கு வந்த ஒரு நபர், உங்களுக்கு ஜமாஅத்திடமிருந்து கிடைத்துள்ள வீடு மிக சிறிதாக உள்ளது என்று கூறி விட்டார். நீங்கள் கூறினால் உங்களுக்கு பெரிய வீடு கிடைக்கலாம் என்று கூறினார். அப்போது ஜமாஅத் என்னை கூடாரத்தில் தங்க வைத்து விட்டாலும் அதில் வசிப்பதற்கு நான் தயாராக உள்ளேன். நான் எந்த கோரிக்கையும் வைக்க மாட்டேன் என்று அன்னார் கூறினார்கள்.

அடுத்து அன்னாரின் மகன் இவ்வாறு எழுதுகின்றார்: சில ஏழைகளுக்கு அன்னார் மறைமுகமான உதவி செய்து வந்துள்ளார்கள். தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு தான் அன்னாரின் இந்த சிறப்புகளைப் பற்றி எங்களுக்கு தெரிய வந்துள்ளது.

மர்ஹூமின் சிறிய மகன் இவ்வாறு கூறுகின்றார்: அன்னார் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். திருக்குர்ஆன் மீது அன்பு கொண்டவராக இருந்தார்கள். மென்மையான உள்ளமும், அன்பு நிறைந்த வடிவிலும் நம்பிக்கைக்குரியவராகவும், எல்லையற்ற உயர்வான சிறப்புகளை கொண்டவராகவும் மர்ஹூம் இருந்தார்கள். காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவதிலும், கிலாஃபத்துடன் நன்றியுணர்வுடன் இருப்பதிலும், வக்ஃபை நிறைவேற்றுவதிலும் அசாதாரண உணர்வு தந்தையிடம் காணப்பட்டது. நானும் அன்னாரிடத்தில் பார்த்துள்ளேன். மிகவும் கண்ணியமிக்க நபராகவும், மிகப் பணிவுடன் ஒவ்வொரு பணியையும் செய்யக் கூடியவராகவும், நன்றியுணர்வுடன் தமது பைஅத்திற்குரிய உரிமையை வழங்கக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள். அதேபோன்று ஜமாஅத்தின் பணத்தை எப்படியாவது சேமிக்க வேண்டும். எப்படியாவது குறைந்தபட்ச செலவில் அதிகமான பயன் பெற வேண்டும் என்று அன்னார் முயற்சி செய்து வந்தார்கள். அன்னார் ரொட்டி சமைக்கக் கூடிய சில மிஷின்களையும் வடிவமைத்துள்ளார்கள். அதற்காக அன்னார் ரப்வாவில் அதிக பணி செய்துள்ளார்கள்.

அடுத்து அவர் எழுதுகின்றார்: துன்பம் மற்றும் பிரச்சனைகளின் நேரத்தில் எப்போதும் அன்னாரிடத்தில் பொறுமை மற்றும் தைரியத்தை நான் கண்டுள்ளேன். பிரச்சனை அல்லது துன்பத்தின் நேரத்தில் அதிகமான நேரம் அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதை நான் கண்டுள்ளேன். நோயுற்ற நேரத்திலும், மரணத்திற்கு முன்பும் அன்னார் சிறிதளவு கூட துன்பத்தை உணரச் செய்ததில்லை. எல்லா பணிகளையும் மிகுந்த நேர்மையுடனும், உத்வேகத்துடனும் செய்து வந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

அடுத்த நற்குறிப்பு அமெரிக்காவின் முன்னாள் அமீர் ஜமாஅத் மதிப்பிற்குரிய இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய கானிதா ஃஸபர் சாஹிபா அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் கார் விபத்தில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் 1941 ல் பிறந்தார்கள். ஓய்வு பெற்ற ஷெசன் நீதிபதியான சவுத்ரி அஃஸம் அலி சாஹிப் அன்னாரின் தந்தையாக இருந்தார்கள். மர்ஹூமாவின் தாய்வழிப் பாட்டனார் சவுத்ரி ஃபக்கீர் முஹம்மது சாஹிப் அவர்களுக்கு (இந்தியா, பாகிஸ்தான்) பிரிவினைக்குப் பிறகு உடனடியாக நாஸிர் உமூரே ஆமாவாக தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. மர்ஹூமா ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காரராகவும், அழகிய இயல்பை கொண்ட பெண்மணியாகவும் இருந்தார். கிலாஃபத்துடன் எப்பொழுதும் நன்றியுணர்வுமிக்க தொடர்பை வைத்திருந்தார்கள். அதனை அன்னார் பல முறை வெளிப்படுத்தியும் வந்துள்ளார்கள். மர்ஹூமாவிற்கு திருக்குர்ஆன் மீது அதிக அன்பு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதும் அதிக பற்று இருந்தது. மேலும் தமது பிள்ளைகளிடத்திலும் இதே அன்பையும், பற்றையும் உருவாக்குவதற்கு மர்ஹூமா முயற்சி செய்து வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூமா தமக்குப் பிறகு தனது கணவர் மட்டுமின்றி 2 மகள்களையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு அன்னாரின் ஓர் இளம் வயது மகனும் விபத்தில் மரணமடைந்து விட்டார். மிகவும் பொறுமையுடன் அந்த துன்பத்தை அன்னார் சகித்துக் கொண்டார்கள்.

ஆஸ்திரேலியாவின் முபல்லிக் இனாமுல் ஹக் கவ்ஸர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அன்னார் முதலில் அமெரிக்காவில் இருந்தார்கள். எனவே அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் வகுப்புகள் நடைபெற்று வந்தன. அவற்றில் தொடர்ந்து பங்கு பெற்று வந்தார்கள். மிக தொலைதூர பயணத்தை மேற்கொண்டு ஜமாஅத்திற்கு வந்து சென்றார்கள். மர்ஹூமா Phd டாக்டர் ஆக இருந்தார்கள். ஆனால் இயல்பில் மிகவும் எளியவராக இருந்தார்கள். எந்த வகையான பெருமையும் அல்லது பகட்டின் அம்சமும் அவர்களிடத்தில் இருந்ததில்லை. ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களை மிகவும் கருத்தில் வைத்து வந்தார்கள். முபல்லிக்மார்களுடன் ஒரு பரிவுமிக்க தாயைப் போன்று நடந்து வந்தார்கள். மிகவும் கண்ணியமும், மரியாதையும் வழங்கி வந்தார்கள். மிக பணிவுடன் அனைத்துப் பணியையும் செய்து வந்தார்கள். காலணிகளை வைக்க வேண்டிய இடத்தில் அதை வையுங்கள் என்று பெரும்பாலும் லஜ்னா உறுப்பினர்களுக்கு கூறி வந்தார்கள். யாராவது ஒருவர் அவ்வாறு வைக்கவில்லையென்றால் தாம் சுயம் அதை எடுத்து அந்தப் பணியை செய்து முடித்து விடுவார்கள். அதுமட்டுமின்றி மஸ்ஜிதை சுத்தம் செய்தல் போன்ற பணிகளையும் மிக பணிவுடன் செய்து வந்தார்கள். தற்பெருமை அல்லது பகட்டு முற்றிலும் அன்னாரிடம் இருந்ததில்லை. மிக எளிய ஆடைகளையே அணிந்து வந்தார்கள். மிக அழகிய முறையில் பிறருடன் நடந்து வந்தார்கள். யாரிடத்திலும் எந்த அதிருப்தியும் கொண்டதில்லை. எல்லோரிடமும் மிக நல்ல முறையில் நடந்து வந்தார்கள். கிலாஃபத் சார்பாக கூறப்பட்ட அனைத்து திட்டங்களிலும் பங்கு பெற்று வந்தார்கள்.

அல்லாஹ் இந்த அனைத்து மர்ஹூம்களுடனும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களின் சந்ததிகளுக்கு அவர்களின் அடிச்சுவட்டில் நடப்பதற்கு நற்பேறு வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِیْكَ لَهٗ وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ- الرَّحْمٰنِ الرَّحِیْمِ- مٰلِكِ یَوْمِ الدِّیْنِ- اِیَّاكَ نَعْبُدُ وَ اِیَّاكَ نَسْتَعِیْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِیْمَ- صِرَاطَ الَّذِیْنَ اَنْعَمْتَ عَلَیْهِمْ

غَیْرِ الْمَغْضُوْبِ عَلَیْهِمْ وَ لَا الضَّآلِّیْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு (கடந்த குத்பாவில்) நடைபெற்று வந்தது. பைஅத்தே உக்பா சானியா பற்றிய குறிப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. பைஅத்தே உக்பா சானியா சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இந்த நிகழ்ச்சி மற்றும் கூட்டத்தின் ஏற்பாட்டின் உயர் பொறுப்பாளராக ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஒரிடத்தில் பாதுகாப்புக்காக நிறுத்தினார்கள். மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் அன்னார் காவல் மற்றும் பாதுகாப்பிற்காக நிறுத்தி இருந்தார்கள்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 2 பக்கம் 21 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மதீனா ஹிஜ்ரத் நிகழ்ந்தபோது அதில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் உடன் இருந்ததாக குறிப்பு உள்ளது. மக்கத்து காஃபிர்கள் மக்காவில் முஸ்லிம்கள் மீது இழைத்து வந்த அநீதிகளும், கொடுமைகளும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே சென்றது. இதற்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு கனவு காட்டப்பட்டது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கு ஹிஜ்ரத் செய்ய இருந்தார்களோ அந்த இடம் இரண்டு முஸ்லிம்களுக்கு காட்டப்பட்டது. அந்த இடம் தரிசு பூமியாகவும், பேரீத்தம் பழங்களால் சூழப்பட்டதாகவும் இருந்தது. ஆயினும் அந்த இடத்தின் பெயர் காட்டப்படவும் இல்லை. கூறப்படவும் இல்லை. ஆனால் அதன் புவியியல் அமைப்பு மற்றும் வரைபடத்தை பார்த்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அது ஹஜர் அல்லது யமாமாவாக இருக்கும் என்பதை புரிந்து கொண்டு கூறினார்கள். சஹீஹ் புகாரியின் ஓர் அறிவிப்பிலும் இந்த குறிப்பு கிடைக்கின்றது. அதற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் فَذَهَبَ وَهَلِيْ اِلٰى اَنَّهَا الْيَمَامَةُ اَوِ الْهَجَرُ، فَاِذَا هِيَ الْمَدِيْنَةُ يَثْرِبُ என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப் ஹதீஸ் எண் 3622)

அந்த இடம் யமாமா அல்லது ஹஜர் என்று எனது எண்ணம் சென்றுள்ளது. ஆனால் அது யஸ்ரப் நகரமாகும் என்பதையே நான் பார்க்கின்றேன். யமாமாவும் கூட ஏமனின் ஒரு பிரபலமான நகராகும்.

(சீரத் ஃபர்ஹிஙங் பக்கம் 321 – 2003 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஜர் என்ற பெயரால் அரபு நாட்டில் ஏராளமான ஊர்கள் காணப்படுகின்றன. பஹ்ரைன் நாட்டின் ஒரு நகரமும், பஹ்ரைனின் ஒரு பகுதியும் ஹஜர் என்றே அழைக்கப்படுகின்றது.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 5 பக்கம் 452 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் சிறிது காலத்திலேயே நிலைமை ஒரு திசையில் ஒன்று கூடியது. மதீனாவின் நற்பேறு பெற்ற அன்ஸார் சகோதரர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளத் தொடங்கினார்கள். எனவே அந்த இடம் யஸ்ரப் நாட்டின் பூமியாக இருந்தது என்பது இறைவனின் தூண்டுதலின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காட்டப்பட்டது. அந்த இடம் பிற்காலத்தில் மதீனா என்ற பெயரால் பிரபலமான இடமாக ஆனது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புரிதலை குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹதீஸில் இந்த சொற்கள் உள்ளன.

فَذَهَبَ وَهَلِيْ اِلٰى اَنَّهَا الْيَمَامَةُ اَوِ الْهَجَرُ، فَاِذَا هِيَ الْمَدِيْنَةُ يَثْرِبُ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது புரிதலால் முன்னறிவிப்பு வெளிப்படும் இடம் மற்றும் உண்மைப்படுத்துகின்ற இடம் என்று எதனை கருதி இருந்தார்களோ அது தவறு என வெளிப்பட்டது.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 472)

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் அநீதியிழைக்கப்பட்ட மற்றும் கொடுமைகளுக்கு ஆளான சஹாபிகள் மற்றும் முஸ்லிம்களை மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து செல்வதற்கு அனுமதியும், வழிகாட்டலும் வழங்கினார்கள். அப்போது மக்காவின் முஸ்லிம்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்ய தொடங்கி விட்டார்கள். மற்றொரு பக்கம் பைஅத்தே உக்பா சானியாவிற்குப் பிறகு இந்த ஹிஜ்ரத்தில் வேகம் ஏற்பட்டது. ஏராளமான வீடுகளும், தெருக்களும் காலியாகி விட்டன. இந்த சூழல் மக்காவின் அநீதியாளர்களான தலைவர்களை மேலும் கோபமூட்டியது. கோபத்தால் செய்வது அறியாது நின்றனர். அப்போது அவர்கள் மற்றொரு நடவடிக்கையும் எடுத்தனர். அதாவது அந்த அநீதியிழைக்கப்பட்ட நபர்களை ஹிஜ்ரத் செய்வதிலிருந்தும் தடுக்கத் தொடங்கினர். அநீதி மற்றும் கொடுமைக்கான புத்தம் புது வழிகளை செயல்படுத்த தொடங்கினர்.

சில முறை கணவரை (அனுமதித்து) செல்ல விட்டார்கள். ஆனால் அவரது மனைவியையும் பிள்ளைகளையும் அவரிடமிருந்து பறித்துக் கொண்டார்கள். சில முறை ஒரு முதலீட்டாளர் மற்றும் செல்வச் செழிப்புடையவர்களிடம், நீங்கள் எங்களது மக்கா நகரத்திலிருந்து சம்பாதித்துள்ளீர்கள். இங்கிருந்து நீங்கள் செல்ல வேண்டுமென்றால் இந்த அனைத்து செல்வங்களையும் எங்களுக்கு கொடுத்து விட்டு செல்லுங்கள் என்று சாக்குப்போக்குகளைக் கூறினர். சில முறை தாயின் பாசத்தை காரணம் காட்டி தடுத்தார்கள். அதாவது உங்களது தாயை சந்தித்து விட்டுச் செல்லுங்கள் என்று கூறிவிட்டு பிறகு வழியிலேயே அவர்களை கயிறுகளால் கட்டி அறையில் பூட்டி விட்டார்கள்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 224–227 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் ஈமானிய செல்வத்தாலும், இஸ்லாமிய மார்க்கத்தின் மீதான நேசத்தாலும் நிறைந்திருந்த, பொறுமை மற்றும் நன்றி செலுத்தக் கூடிய நம்பிக்கையாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க ஜமாஅத் தொடர்ந்து மதீனாவை நோக்கி சென்று கொண்டே இருந்தது. எவ்வாறிருப்பினும் ஏறக்குறைய ஹிஜ்ரத் செய்ய முடிந்த முஸ்லிம்கள் மக்காவை விட்டு விட்டு வெளியேறி விட்டனர். யாரால் ஹிஜ்ரத் செய்ய முடிந்ததோ அவர் ஹிஜ்ரத் செய்து விட்டார். தற்போது மிகவும் பலவீனமான, இயலாத சிறிய அளவிலான முஸ்லிம்கள் மட்டுமே பின்தங்கி விட்டனர். அவர்களைக் குறித்து திருக்குர்ஆனிலும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

اِلَّا الْمُسْتَضْعَفِيْنَ مِنَ الرِّجَالِ وَ النِّسَآءِ

وَالْوِلْدَانِ لَا يَسْتَطِيْعُوْنَ حِيْلَةً وَّلَا يَهْتَدُوْنَ سَبِيْلًا

பொருள்: ஆயினும் ஆடவர்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியவர்களுள் எவர்(கள்) உண்மையிலேயே பலவீனர்களாகவும், எந்தத் திட்டத்தின்படியும் செயலாற்ற இயலாதவர்களாகவும் எந்த வழி வகைகளையும் காணாதவர்களாகவும் இருந்தார்களோ.

அவர்கள் மட்டுமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இன்னும் மதீனாவிலேயே இறைவனின் கட்டளைக்காக காத்திருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் மக்காவிலேயே இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்காக அனுமதி வேண்டியபோது காத்திருங்கள் என்று கட்டளை கிடைத்தது. எனக்கும் அனுமதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது என்றோ அல்லது ஓர் அறிவிப்பிற்கேற்ப, நீங்கள் அவசரப்படாதீர்கள். அல்லாஹ் உங்களுக்காக ஒரு தோழருக்கான ஏற்பாட்டையும் செய்து விடக் கூடும் என்றோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணம்! தங்களுக்கும் அனுமதி கிடைத்து விடுமா? என்று கேட்டார்கள். ஆக ஹிஜ்ரத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு பிரியக் கூடிய துன்பம் நீங்கி விட்டது. இந்த புதிய நற்செய்தியைக் கேட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். மேலும் ஹிஜ்ரத்திற்கான எண்ணத்தை ஒத்தி வைத்து விட்டார்கள். ஆயினும் அன்னார் நுட்பமான முறையில் இரண்டு ஒட்டகங்களை விலைக்கு வாங்கி வைத்திருந்தார்கள். மேலும் அந்த ஒட்டகங்களுக்கு சிறப்பாக உணவளித்து ஹிஜ்ரத் பயணத்திற்காக அதனை தயார்படுத்தி இருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் கிஃபாலா ஹதீஸ் எண் 2297)

இந்த விஷயத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் தோழர்கள் ஹிஜ்ரத்திற்கான தயாரிப்புகளை தொடங்கினார்கள். ஒருவருக்குப் பிறகு மற்றொரு குடும்பம் என மக்காவிலிருந்து குடும்பங்கள் மறைய தொடங்கின. தற்போது இறைவனின் ஆட்சிக்காக காத்துக் கொண்டிருந்த மக்களும் தைரியம் அடைந்தனர். சில முறை ஓர் இரவிலேயே மக்காவின் ஒரு முழு தெருவிலிருந்த வீடுகளுக்கும் பூட்டு போடப்பட்டது. காலை நேரத்தில் நகரத்து மக்கள் தெருவின் அமைதியைப் பார்த்து இதனைத் தெரிந்து கொண்டார்கள். அதாவது இந்தத் தெருவில் வசிக்கக் கூடிய அனைத்து மக்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார்கள். மேலும் இஸ்லாத்தின் இந்த ஆழமான தாக்கத்தைக் கண்டு அதாவது மக்காவிற்குள்ளேயே இஸ்லாம் பரவிக் கொண்டிருந்ததைக் கண்டு மிக ஆச்சரியம் அடைந்து கொண்டிருந்தனர். இறுதியில் மக்காவிலிருந்து முஸ்லிம்கள் காலி செய்து விட்டனர். வெறும் சில அடிமைகளும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அலி (ரலி) மட்டுமே மக்காவில் தங்கி இருந்தனர்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 222)

அடுத்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மக்கத்து காஃபிர்களுக்கு ஏனைய மக்களை காட்டிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இயல்பாகவே அதிக பகைமை இருந்தது. ஏனென்றால் அன்னார் (ஸல்) அவர்களின் போதனையின் காரணமாகவே மக்களிடத்தில் ஷிர்க்கிற்கு எதிரான போதனை பரவிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் கண்டனர். அன்னார் (ஸல்) அவர்களை கொலை செய்து விட்டால் பின்னர் எஞ்சிய ஜமாஅத் சுயமே சிதறுண்டு விடும் என்பதையும் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிக துன்பம் கொடுக்க விரும்பினர். மேலும் எப்படியாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாதத்திலிருந்து விலகி விட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். எனினும் இந்த கஷ்டங்களுக்கு பிறகும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு ஹிஜ்ரத் செய்ய கட்டளை வழங்கி விட்டார்கள். ஆனால் சுயமே துன்பங்கள் மற்றும் வேதனைகளுக்கு மத்தியில் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்யவில்லை. ஏனென்றால் அல்லாஹ்வின் புறமிருந்து எந்த கட்டளையும் வந்திருக்கவில்லை. எனவே நான் ஹிஜ்ரத் செய்து சென்று விடவா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் عَلٰى رِسْلِكَ فَإِنِّيْ أَرْجُوْ أَنْ يُّؤْذَنَ لِيْ எனக்கும் அனுமதி கிடைத்து விடும் என்று நான் நம்புகின்றேன். தாங்கள் இன்னும் காத்திருங்கள் என்று கூறினார்கள்.

(சீரத்துன் நபி (ஸல்), அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 489)

தாருன் நத்வா எனும் இடத்தில் நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக இரகசிய ஆலோசனை செய்வதற்காக ஒன்று கூடி இருந்தார்கள். இது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: மக்கத்து தலைவர்கள் இந்த விஷயத்தில் கடும் கோபத்தில் இருந்தார்கள். முஸ்லிம்கள் அவர்களின் கைகளிலிருந்து தப்பித்து ஓடி விட்டார்கள் என்று அவர்கள் மிகவும் நிம்மதியிழந்திருந்தார்கள். அப்போது அவர்கள் தாருன் நத்வா என்ற இடத்தில் ஒன்று கூடினார்கள்.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: குரைஷிகள் இந்த காட்சியை கண்டனர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு கூட்டமும், சிறிது சஹாபிகளும் இணைந்து விட்டனர். அவர்கள் மக்காவைச் சார்ந்த முஸ்லிமாகவும் இருக்கவில்லை. மேலும் அவர்களின் பகுதியை சார்ந்தவர்களாகவும் இருக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகள் அமைதியை நல்கக் கூடிய மக்களின் பக்கம் ஹிஜ்ரத் செய்து சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை குரைஷிகள் கண்டனர். முஸ்லிம்கள் பாதுகாப்பான இடத்திற்கு சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை புரிந்து கொண்டனர். மேலும் மதீனா வாசிகள் சார்பாக அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் குரைஷிகள் அறிந்து கொண்டனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அந்த மக்களிடம் சென்று விடக் கூடாது என்ற அச்சம் குரைஷிகளுக்கு ஏற்பட்டது. மேலும் அந்த மக்கள் குரைஷிகளுடன் போர் புரிவதற்காக ஒன்று கூடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் அறிந்து கொண்டனர். எனவே அவர்கள் அனைவரும் தாருன் நத்வா எனும் இடத்தில் ஒன்று கூடினர். அது குஸைய்யி பின் குலாப் என்பவனின் வீடாக இருந்தது. குரைஷிகள் எடுத்த தீர்மானங்கள் அனைத்தும் அங்கேயே தான் எடுக்கப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி எப்போதெல்லாம் அச்சம் உணரப்பட்டதோ அப்போது அந்த மக்கள் ஆலோசனை செய்வதற்காக அங்கு ஒன்று கூடினர்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அந்த மக்கள் இதற்காக ஒன்று கூடினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து ஆலோசனை செய்வதற்காக தாருன் நத்வா எனும் இடத்தில் நுழைய வேண்டும் என்று உறுதி எடுத்தார்கள். எந்த நாளன்று அந்த மக்கள் உறுதி எடுத்தார்களோ அந்த நாளில் அந்த மக்களின் கதை முடிந்தது. அந்த நாள் يَوْمُ الزَّحْمَة என்று அழைக்கப்படுகின்றது. அவர்களுக்கு முன்னால் ஒரு முதிய மற்றும் வயதான நபரின் வடிவத்தில் இப்லீஸ் தோன்றினான். அதன் பொருள் என்னவென்றால், அந்த நபர் இப்லீஸிய பண்புகளைக் கொண்ட மனிதராக இருந்தார். எவ்வாறிருப்பினம் அந்த நபர் போர்வையை போர்த்தி இருந்தார். தாருன் நத்வாவின் வாசலில் நின்று கொண்டார். மக்கள் அவரை அறிந்திருக்கவில்லை. அவரை அந்த மக்கள் வாசலுக்கு அருகே நின்று கொண்டிருப்பதை பார்த்தபோது இந்த முதிய நபர் யார்? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு அவர் நான் நஜத் வாசிகளைச் சார்ந்த வயதான மனிதர் ஆவேன் என்று கூறினார். மேலும் நீங்கள் எந்த விஷயத்திற்கு உறுதி எடுத்துள்ளீர்களோ அதனை நான் கேட்டு விட்டேன். நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்பதைக் கேட்பதற்காக நான் உங்களிடத்தில் இங்கு வந்துள்ளேன். உங்களுக்கு இதன் மூலம் ஏதாவது ஒரு கருத்து அல்லது நன்மை கிடைத்து விடும் என்று நான் நம்புகின்றேன் என்றும் கூறினார். மேலும் அவர் தன்னைக் குறித்தும் கூறினார். அதற்கு அந்த மக்கள் சரிதான் உள்ளே வாருங்கள் என்று கூறினர். அவர் அந்த மக்களுடன் உள்ளே நுழைந்து விட்டார். அங்கு குரைஷிய தலைவர்களின் ஒரு பெரும் கூட்டம் கூடியிருந்தது. அவர்களில் மிகவும் பெரியவர்களின் பெயர்கள் இவையாகும்: உத்பா பின் ரபீஆ, ஷைபா பின் ரபீஆ, அபுசுஃப்யான் பின் ஹர்ப், துஃயமா பின் அதீ மற்றும் இன்னும் சில மக்கள் இருந்தனர். அபுஜஹில் பின் ஹிஷாம், ஹிஜாஜின் இரண்டு மகன்கள் மற்றும் ஏராளமான மக்கள் இருந்தனர். இதுமட்டுமின்றி குரைஷிகளின் கணக்கில் வராத இன்னும் சில தலைவர்களும் இருந்தனர். அனைவரும் ஒன்று கூடினர்.

அப்போது ஆலோசனைகளை கொடுப்பதற்கான நேரம் வந்தது. அப்போது ஒரு நபர் இந்த ஆலோசனையை கூறினார். அவரை அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இரும்பு சங்கலிகளால் கட்டி கைது செய்து விடுங்கள். மேலும் வெளியிலிருந்து கதவை அடைத்து விடுங்கள் என்று ஒருவர் ஆலோசனை கூறினார். பின்னர் அவர் மரணிப்பதற்காக காத்திருங்கள். இதற்கு முன்பு இவர்களைப் போன்ற இரண்டு கவிஞர்களான சுபைர் மற்றும் நாபிஆ ஆகியோருக்கு இதே நிலைமை தான் ஏற்பட்டது. அதாவது அவர்களுக்கு மரணம் வந்ததைப் போன்று இவர்களின் முடிவாக மரணம் இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவும் அந்த மக்கள் இதே திட்டத்தை தீட்டி இருந்தனர். அப்போது நஜதைச் சார்ந்த அந்த முதியவர் கூறினார்: இல்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னைப் பொறுத்தவரை இந்த கருத்து உங்களுக்கு ஆகுமானதல்ல. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அவரைக் கைது செய்து விட்டால் அந்த செய்தியை அறிந்து வீட்டு வாசலிலிருந்து வெளியேறி அவர்களின் தோழர்கள் நிச்சயம் வந்தடைந்து விடுவார்கள். பின்னர் உங்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டு அந்த நபரை உங்களின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேற்றிக் கொண்டு சென்று விடுவது என்பது சாத்தியமான விஷயம் ஆகும். பின்னர் அவர்களின் உதவியால் தமது எண்ணிக்கையை அதிகரித்து உங்களைத் தோற்கடித்து விடுவார்கள். எனவே வேறு ஏதாவது திட்டத்தை சிந்தியுங்கள் என்று கூறினார். அப்போது ஒரு நபர் இந்த ஆலோசனையை

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 27 January 2022 Issue No. 4

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வழங்கினார். நாம் அந்த நபரை நமக்கு மத்தியிலிருந்து வெளியேற்றி விடுவோம். மேலும் நமது நகரத்திலிருந்து நாடு கடத்தி விடுவோம். அதன் பிறகு அவர் எங்கு செல்கின்றார்? எங்கு வசிக்கின்றார்? என்பது நமக்கு ஒரு பொருட்டல்ல என்று கூறினார். அவர் நம்மை விட்டு விலகிச் சென்று விட்டால் நாமும் அவரிடமிருந்து விலகிக் கொள்வோம். இவ்வாறு நமது விவகாரமும் சரியாகி விடும். நான் முன்பிருந்த நிலையில் வசிக்கத் தொடங்கி விடுவோம் என்று கூறினார்.

அப்போது அந்த நஜதி முதியவர் கூறினார்: இல்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதுவும் சரியானதல்ல. அந்த நபரின் கூற்று எவ்வளவு அழகானதாகவும், பேச்சு எவ்வளவு இனிமையாகவும் உள்ளது என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். மேலும் அவர் கொண்டு வந்த விஷயங்களின் மூலம் எவ்வாறு மக்களின் உள்ளங்களை தோற்கடித்து விடுகின்றார் என்பதையும் நீங்கள் அறிவதில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அவ்வாறு செய்தால் நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்களா? அவர் அரபின் ஏதாவதொரு கோத்திரத்தில் தங்கி தமது கூற்றுகளால் அவர்களை வசப்படுத்தி விடலாம். பின்னர் அந்த மக்கள் அவரை பின்பற்றத் தொடங்கி விடலாம். பின்னர் அவர்களுடன் இணைந்து உங்களை நோக்கி படையெடுத்து வரலாம். உங்களை உங்களது நகரத்திலேயே அழித்து விடக் கூடும். உங்களது விவகாரங்களை உங்களது கரங்களிலிருந்து பறித்து விடலாம். பின்னர் அவர்கள் விரும்பும்படி உங்களுடன் நடந்து கொள்வார்கள். எனவே இதைத் தவிர்த்து வேறு ஏதாவதொரு திட்டத்தை யோசியுங்கள் என்று கூறினான். அப்போது அபூஜஹில் கூறினான்: எனது கருத்து என்னவென்றால், குரைஷியர்களின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஓர் இளமையான மற்றும் வலிமையான நபரை தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் நல்ல பாரம்பரியமிக்க இளைஞர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் ஒவ்வொருவரின் கையிலும் வெட்டக் கூடிய கூர்மையான வாளைக் கொடுக்க வேண்டும். பின்னர் அவர்கள் அவரை அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்ய வேண்டும். ஒரு நபரின் தாக்குதலைப் போன்று அவர் மீது தாக்குதல் நடத்த வேண்டும். மேலும் அவர்கள் அவரை கொன்று விட வேண்டும். இவ்வாறு அந்த நபரிடமிருந்து நமக்கு நிம்மதி கிடைத்து விடும். இவ்வாறு கொலை செய்வதன் விளைவு அந்த நபரின் இரத்தம் அனைத்து கோத்திரங்கள் மீதும் பங்கிடப்பட்டு விடும். பனூ அப்தே மனாஃப் அனைத்து கோத்திரங்களுடனும் போர் புரிய முடியாது. எனவே ஈட்டுத் தொகையை பெறுவதில் திருப்தி கொண்டு விடுவார்கள். நாம் அவர்களுக்கு ஈட்டுத் தொகையை கொடுத்து விடலாம். அப்போது அந்த வயதான நஜதி கூறினான்: கருத்து என்றால் அது இந்த நபரின் கருத்து தான். மற்ற அனைத்தும் வீணான விஷயங்களாகும். சுருக்கமாக இந்த கருத்தில் அனைவரும் உடன்பட்டவாறு ஆமோதித்தனர்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 340–342 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றொரு பக்கம் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அனைத்து நிலவரங்களையும் அறிவித்து விட்டான். அது குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَ اِذۡ یَمۡکُرُ بِکَ الَّذِیۡنَ کَفَرُوۡا لِیُثۡبِتُوۡکَ
اَوۡ یَقۡتُلُوۡکَ اَوۡ یُخۡرِجُوۡکَ ؕ وَ یَمۡکُرُوۡنَ
وَ یَمۡکُرُ اللّٰہُ ؕ وَ اللّٰہُ خَیۡرُ الۡمٰکِرِیۡنَ

நினைவிற் கொள்வீராக. நிராகரிப்பாளர்கள் உம்மைக் குறித்து சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். உம்மை ஒரே இடத்தில் அடைத்து வைக்க வேண்டும் அல்லது கொலை செய்து விட வேண்டும் அல்லது உம்மை நாட்டிலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்று அவர்கள் சதி செய்தனர். அவர்கள் அந்த சதித்திட்டங்களில் மும்முரமாக இருந்தனர். அல்லாஹ்வும் அவர்களின் சதித்திட்டத்தை முறியடிக்க இருந்தான். திட்டம் தீட்டுபவர்களில் அல்லாஹ் மிகச் சிறந்தவன் ஆவான். மேலும் அல்லாஹ் சதித்திட்டம் தீட்டுபவர்களை நன்கு அறிகின்றான். அத்துடன் ஜிப்ரீல் அவர்களின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி வழங்கி விட்டான். (சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 232 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கத்து காஃபிர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு எண்ணம் கொண்டார்கள். அப்போது கம்பீரமிக்க அல்லாஹ் தனது தூய நபிக்கு இந்த தீய எண்ணத்தைப் பற்றிய செய்தியை வழங்கி விட்டான். மேலும் மக்காவிலிருந்து மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து செல்வதற்கு கட்டளையும் வழங்கினான். பின்னர் வெற்றியின் உதவியும் திரும்புவதற்கான நற்செய்தியும் வழங்கினான். இந்த உரையாடல் மற்றும் சோதனை புதன்கிழமையன்று மதிய வேளையில் கடுமையான வெப்பம் இருந்த நாளில் இறைவன் புறமிருந்து வெளிப்பட்டது. (சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 64 அடிக்குறிப்பு)

ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி கிடைத்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு எச்சரிக்கையுடன் மதிய வேளையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். அதாவது எந்த நேரத்தில் மக்கா வாசிகள் பொதுவாக தமது வீட்டிலேயே இருப்பார்களோ மேலும் எந்த நேரத்தில் ஒருவர் மற்றவரிடத்தில் செல்ல மாட்டார்களோ அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். மேலும் தமது முகம் மற்றும் தலையை துணியால் மறைத்துக் கொண்டார்கள். கடுமையான வெப்பம் இருந்தது. எனவே கூடுதல் முன்னெச்சரிக்கையாக இவ்வாறு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு அருகில் சென்றபோது யாரோ ஒருவர் இவ்வாறு கூறினார்.

தப்ரானி ஃபத்ஹுல் பாரி போன்றவற்றின் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் அஸ்மா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்திருப்பதாக தெரிகிறது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமது வீட்டிற்கு வருகை தந்திருக்கின்றார்கள். எனவே அதற்கு நிச்சயம் ஏதாவதொரு சிறப்பான காரணம் இருக்கும். அத்துடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்து வேகமாக அர்ப்பணிப்புமிக்க உணர்வுடன் வெளியே வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே வந்தார்கள். அப்போது அறையில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) ஆகியோர் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் உங்களுடன் இருக்கின்ற இந்த மக்களை வெளியே அனுப்பி விடுங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹுஸூர்! எனது இரு மகள்கள் மட்டுமே இங்கே உள்ளனர். வேறு யாரும் இல்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஓர் அறிவிப்பிற்கேற்ப அன்னார் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களின் வீட்டின் மக்களே இங்கு உள்ளனர். வேறு யாரும் இல்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்து விட்டது என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களின் தோழமையில் இருப்பேனா? என்று உடனடியாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதாவது நானும் தங்களுடன் இருப்பேனா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! என்று கூறினார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் புயூஹ்.. அறிவிப்பு எண் 2138 & சஹீஹுல் புகாரி, கிதாப் மனாகிபுல் அன்ஸார், அறிவிப்பு எண் 3905)

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆனந்தத்தில் அழுதார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஆனந்தத்தாலும் ஒருவர் அழுவார் என்று அன்று தான் எனக்கு முதன் முறையாக தெரிய வந்தது.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னு ஹிஷாம் பக்கம் 343 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

(தொடரும்....)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad